பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 28 வெள்ளிக்கிழமை 07.05.2021 கதிர் 1823


### இது ரகசியம் அல்ல!

நேற்றுமுன்தினம் 'காலைக் கதிர்' மாலைப் பதிப்பின் ஆசிரிய தலையங்கம் 'அபரிமித வாழ்த்து எதற்கு?' என்ற தலைப்பில் பிரசுரமாகியிருந்தது.

தமிழகத்தின் புதிய முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மு.க.ஸ்டாலி பக்கம்02 »

# சகல சவால்களையும் முறியடித்தே தீருவோம்

## அமெரிக்கத் தூதுவருடனான சந்திப்பில் மஹிந்த விளாசல்



கொழும்பு, மே 07

எமது ஆட்சியில் இலங்கை எத்தகைய சவால்களை எதிர் கொண்டாலும் அனைத்தையும் முறியடித்தே தீருவோம்.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். ☞2

## யாழில் நேற்று 20 பேருக்கு கொரோனோ

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 20 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 28 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞2

### கொரோனாத் தொற்றால்

## யாழில் மேலும் இருவர் மரணம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரண்டுவயோதிபர்கள் கொரோனா வைரஸ் தொற்று நோயால் உயிரிழந்துள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர்களில் ஒருவர் ☞2

## மாகாண மட்டத்திலாவது 'லொக்டவுன்' அவசியம்

### சஜித் அணி வலியுறுத்து

கொரோனா வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வருகின்றது. எனவே, முழு நாட்டையும் முடக்க முடியாவிட்டால் குறைந்த பட்சம் மாகாண மட்டத்திலாவது உடன் லொக்டவுன் நடைமுறையைப் பின்பற்றுங்கள்.

– இவ்வாறு அரசிடம் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை ☞2

## கிளிநொச்சியிலும் தொற்று நெருக்கடி

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியநிலையில்கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்குசெல்லும்நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றமையால் கிளிநொச்சி மக்கள் மிகுந்த அவதானத்துடன் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். ☞2

## அடங்க மறுக்கும் 'கொரோனா' நேற்றும் 1,895 பேர் அடையாளம்



இலங்கையில் நேற்றும் 1,895 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 424 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றாளர்களில் ஒரு இலட்சத்து 885 பேர் குணமடைந்துள்ளனர். அதேவேளை, 17 ஆயிரத்து 805 பேர் சிகிச்சை பெற்று ☞2

## தாமதம் வேண்டாம்; நாட்டை முடக்கவும்!

### அரசிடம் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்து



இலங்கையில் நாளாந்தம் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றமையால், தாமதிக்காமல் ஒரு வாரத்துக்காவது நாட்டை முடக்குமாறு அரசிடம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண ஊடகங்களிடம் மேற்கண்டவாறு கூறினார்.

புதிய சுகாதார வழிகாட்டல்களை மீறி ☞2

## நாள்தோறும் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்தைத் தாண்டக்கூடிய அபாய நிலைமை

### தொற்று நோய் ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் எச்சரிக்கை

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் நாளாந்த எண்ணிக்கை 2 ஆயிரத்தைக் கடக்கும் அபாய நிலைமை வரும் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப்பிரிவின் பணிப்பாளர் சுதத் சமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரச மருத்துவமனைகளில், நோயாளர்களுக்கான கட்டில்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதைத் தவிர்ப்பதற்காக, இலங்கை இராணுவத்தினரால் கொரோனா நோயாளர்களுக்காகத் தனியொரு தற்காலிக மருத்துவமனை அமைக்கப்பட்டு வருகின்றது. ☞2




## இந்தியப் பயணிகள் இலங்கைக்குள் பிரவேசிக்க மறுக்கப்பட்டது அனுமதி

இந்தியப் பயணிகள் இலங்கைக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ளது.

நேற்றிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் தேமிய அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குள் இந்தியப் பயணிகளை அனுமதிக்க வேண்டாம் எனத் தெரிவித்து, ஸ்ரீலங்கன் விமானசேவைகள் நிறுவனத்துக்கும் அவர் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்தியாவில் கொரோனாப் பரவல் தீவிரமடைந்துள்ளதைக் கருத்தில்கொண்டு, ☞2

### மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி

## மொஹமட் நஷீத் வெடிப்பில் காயம்



மாலைதீவு நாடாளுமன்ற சபாநாயகரும் முன்னாள் ஜனாதிபதியுமான மொஹமட் நஷீத் நேற்று தமது வீட்டுக்கு வெளியே இடம்பெற்ற ☞2

### வடக்கில் கொரோனா நோயாளர்களுக்காக

## மேலும் 3 சிகிச்சை நிலையங்கள் நேற்று தொடக்கம் தயார்படுத்தல்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் கொரோனா நோயாளர்களை அனுமதிக்க மேலும் 3 சிகிச்சை நிலையங்கள் நேற்று முதல் தயார்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன்பிரகாரம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் 2ஆம் மற்றும் 3ஆம் விடுதிகள் கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றப்படுகின்றன.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தின் மலையாளபுரம் பகுதியில் இராணுவத்தினரின் வைத்தியசாலையாக இயங்கிய இடம் கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றப்படுகின்றது.

இதேவேளை, ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

னுக்கு இலங்கைத்தமிழ்தரப்பில் இருந்து ஏகத்துக்குப் போட்டி போட்டுக் கொண்டு வாழ்த்துச் செய்திகள் பொழியப்பட்ட விடயத்தைக் கையாண்டிருந்தது அந்தத் தலையங்கம்.

நேற்றுக் காலை ஓர் அழைப்பு வந்தது. எடுத்தவர் மணவை அசோகன்.

இவரின் தந்தையார் அமரர் மணவைத் தம்பி, போன தலைமுறைத் தமிழ் தலைவர்களுக்கு ரெம்பவும் பரிச்சயமானவர். தமிழகத் தலைவர்களுக்கும் இலங்கைத் தமிழ்த் தலைவர்களுக்கும் பாலமாய் விளங்கியவர். தமிழ்நாடு, தூத்துக்குடி மாவட்டத்தில் மணப்பாடு கிராமத்தில் பிறந்த மணவைத்தம்பி 1960 களில் – அறிஞர் அண்ணாவின் காலத்தில் – இலங்கையில் தி.மு.கவை ஆரம்பித்து அதன் தலைமைப் பதவியையும் ஏற்று இங்கு செயற்பட்டவர். இலங்கையோடு தம்மைப் பிணைத்துக் கொண்டவர்.

இப்போதும், இலங்கையில் தமிழ்ப் பேசும் தலைவர்களுடன் – தமிழ், முஸ்லிம் தலைவர்களுடன் – மிக நெருக்கமான ஊடாட்டத்தைக் கொண்டிருப்பவர் மணவைத் தம்பியின் மகன் மணவை அசோகன். இலங்கையின் மூத்த தமிழ் ஊடகவியலாளர்கள் அனைவருடனும் நெருக்கமான ஊடாட்டத்தைப் பேணுபவர். அவரே தொலைபேசி அழைப்பை எடுத்தார்.

*"அண்ணன் உங்கள் பத்திரிகையைத் தவறாது வாசிப்பவன் நான். இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் பலர் புதிய முதல்வருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியமை பற்றிய ஆசிரிய தலையங்கம் வாசித்தேன். கடந்த பத்தாண்டுகளாக ஸ்டாலின் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது இவர்கள் யாரும் அவரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. உங்கள் பத்திரிகையில் குறிப்பிட்டபடி 'பப்ளிசிட்டிக்காக' இங்கு (இலங்கையில்) அவர்கள் பம்மாத்துக் காட்டி வெளியிடும் வாழ்த்துச் செய்திகள் அங்கு (தமிழகத்திற்கு) எட்டவும் இல்லை, அங்கு ஒரு பொருட்டாக மதிக்கப்பட்டவும் இல்லை. இலங்கையில் இருந்து சென்ற வாழ்த்துச் செய்திகளில் ஒன்றே ஒன்றுக் குத்தான் தி.மு.கவின் உத்தியோகபூர்வ நாளிதழ் 'முரசொலி' முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றது. அது, வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும், யாழ்.மாவட்ட எம்.பியுமான நீதியரசர் விக்னேஸ்வரனின் வாழ்த்துச் செய்திதான் அது.*

*"தமிழகத்துக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமான உறவு தொப்புள்கொடி உறவு! தமிழக முதல்வராகப் பொறுப்பேற்கும் மு.க. ஸ்டாலினுக்கு வாழ்த்து! இலங்கை யாழ்.மாவட்டம் – நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் எம்.பி. கடிதம்! – என்ற தலைப்பில் விக்னேஸ்வரனின் படத்துடன் முக்கிய செய்தியாக அதனை தி.மு.கவின் 'உத்தியோகபூர்வ ஏடான' 'முரசொலி' இன்று (வியாழக்கிழமை) பிர சுரித்திருக்கின்றது. அந்தப் பத்திரிகையின் பக்கங்களையும் உங்களுக்கு அனுப்பியுள்ளேன்."* – என்றார் மணவை அசோகன்.

அவர் குறிப்பிட்டமை சரிதான். நீதியரசர் விக்னேஸ்வரனின் வாழ்த்துச் செய்திக்கு தி.மு.க. ஏடான முரசொலி மிகுந்த முக்கியத்துவம் கொடுத்திருந்தது.

எனக்கு ஒரு மனவருத்தம்தான்.

நேற்றைய முதல்வரின் (விக்கியின்) பாராட்டுக்கு, இன்று முதல்வராகப் பதவியேற்பவர் (ஸ்டாலின்) முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார். நாளை முதல்வராகப் பதவியேற்க நப்பாசையுடன் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு இங்கு காத்திருக்கும் நமது கட்சித் தலைவரின் வாழ்த்துக்கும் அவர் முக்கியத்துவம் கொடுத்திருக்கலாம். எனென்றால் அத் தலைவரின் கட்சிதானே நம் மத்தியில் பழம்பெரும் கட்சி! நேற்று வந்த விக்கிக்கு முக்கியத்துவம் கொடுத்த ஸ்டாலினின் தி.மு.க. பத்திரிகை எட்டுமுறை எம்.பியாக இருந்தவரை ஒதுக்கலாமா...? இது நீதியா?

★ ★ ★

சில தினங்களுக்கு முன்னர் இப்பத்தியில் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டிருந்தேன். வடமராட்சியில் திறந்த மைதானத்தில் கிரிக்கெட் பயிற்சியில் ஈடுபட்டவர்கள் மீது கொரோனாத் தடுப்பு விதிகள் பாய்கின்றன. ஆனால், அடுத்த நாள் (கடந்த செவ்வாய்க்கிழமை) அலரி மாளிகையில் சுமார் நூறு பேருடன் நடைபெறும் கூட்டத்துக்குத் தடை ஏதும் இல்லை என்று சுட்டிக்காட்டியிருந்தேன்.

அந்தக் கூட்டத்தில் இருப்பத்தியைந்து மாவட்டச் செயலாளர்கள், ஒன்பது மாகாண ஆளுநர்கள், ஒன்பது பிரதம செயலாளர்கள், அவர்களின் ஆளணியினர், அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பல அமைச்சர்கள் பங்குபற்றுகின்றனர் என்றும் தெரிவித்திருந்தேன்.

"பரந்த – விசாலமான – மைதானத்தில் இருபது பேர் கூடிப் பயிற்சி பெற்றால் தொற்றக் கூடிய கொரோனா வைரஸ், அலரிமாளிகையில், மூடிய மண்டபத்தில் நூறு பேர் கூடும் கூட்டம் என்றால் அலறி அடித்துக் கொண்டு அந்தப் பக்கம் தலை வைக்காமல் ஓடி ஒளித்து விடும் போல...! நல்ல திருவிழாத்தான் போங்கள்...! ஊருக்குத்தான் உபதேசம்...!" – என்று எனது பத்தியை முடித்திருந்தேன்.

செவ்வாய்க்கிழமை கூட்டம் முடிந்து திருகோணமலைக்குத் திரும்பிய அந்த மாவட்டச் செயலாளருக்கு (அரச அதிபருக்கு) கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் அடுத்த நாள் தென்பட்டமையை அடுத்து அவர் தற்போது தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் தன்னை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திக் கொண்டுவிட்டார் என்று தகவல். அவருக்கு இன்னமுமே – இரண்டு நாள் கழித்தும் – பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்படவில்லை என்று கூறப்படுகின்றது. முக்கிய கோவைகள் மட்டும் அவரது இல்லத்துக்குப் போய் வருகின்றன. போய் வரும் கோவை கள் கூட தவறாது தொற்று நீக்கம் செய்யப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது.

அவர் தொற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமல், அவர் தொடர்பான செய்திகளும் வெளிப்படுத்தப்படாமல் கமுக்கமாக இருக்கின்றமை ஏன் என்று தெரியவில்லை.

தொற்றுக்கான குணங்குறி வெளிப்படுவதற்கு முதல் நாள் அலரி மாளிகையில் நடந்த கூட்டத்தில் அவருக்கு ஒரு பக்கத்தில் இருந்தவர் நம்மூர் அரச அதிபர் என்றும் ஒரு தகவல். அவர் முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லது.

– மின்னல் –

## நாள்தோறும் தொற்றா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கம்பஹா மாவட்டம் – சீதுவ பிரதேசத்தில், தற்காலிக கொரோனா நோயாளர்களுக்கான மருத்துவமனை அமைக்கப்படுகின்றது.

இந்த வைத்தியசாலையில், முதற்கட்டமாக, ஆயிரத்து 200 நோயாளர்களுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கமைய, ஆயிரத்து 200 நோயாளர் கட்டில்கள் தயார்படுத்தப்பட்டுள்ள நிலையில், கட்டில்களின் எண்ணிக்கையை, விரைவில் 10 ஆயிரமாக அதிகரிக்க எதிர்பார்ப்பதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில், அரச வைத்தியசாலைகளில், கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கட்டில்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக, சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலைமையானது, எதிர்வரும் நாள்களில் அதிகரிக்கலாம் எனத் தெரிவித்துள்ள தொற்றுநோய் ஆய்வுப்பிரிவின் பணிப்பாளர் சுதத் சமரவீர, எதிர்வரும் நாள்களில், நாளாந்த கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்தை கடக்கலாம் எனவும் அச்சம் வெளியிட்டுள்ளார்.

அதன் காரணமாக, மேலதிகமாக தொற்றாளர்களுக்காக சிகிச்சை அளிக்கக் கூடிய வசதிகள் அவசியம் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## மேலும் 3 சிகிச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையின் ஒரு விடுதி கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றும் நடவடிக்கை நேற்றிலிருந்து முன்னெடுக்கப்படுகின்றது.

## யாழில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆகிய இரண்டு ஆய்வு கூடங்களில் 807 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அதில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 20 பேரும், கிளிநொச்சியில் 7 பேரும், முல்லைத்தீவில் ஒருவரும் என 28 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 6 பேருக்குக் கொரோனாத் நோய்த்தொற்று உள்ளது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 5 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் தனிமைப்படுத்தல் விடுதியில் ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நான்கு பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் நால்வரும் தொற்றாளர்களுடன் முதல் நிலைத் தொடர்புடையவர்கள்.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நால்வர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் நால்வரில் இருவர் தொற்றாளர்களுடன் முதல்நிலைத் தொடர்புடையவர்கள். இருவர் வீதிப் புனரமைப்புப் பணியில் ஈடுபடுபவர்கள்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்குச் சென்ற 7 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்குச் சிகிச்சைக்குச் சென்ற ஒருவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது – என்றார்.

## சகல சவால்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

சர்வதேச ரீதியான சவால், உள்நாட்டு அரசியல் சவால், கொரோனாப் பெருந்தொற்று சவால், பொருளாதார ரீதியான சவால் எனப் பல சவால்கள் எம்மைச் சூழ்ந்துள்ளன. அனைத்துச் சவால்களையும் முறியடித்து நாட்டு மக்களுடன் இணைந்து பயணிப்பதில் எமது அரசு உறுதியாக உள்ளது எனவும் இந்தப் பேச்சின்போது பிரதமர் மஹிந்த மேலும் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்திக்கொள்வது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் நாட்டின் கொரோனாத் தொற்று நிலைமை மற்றும் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பில் அமெரிக்கத் தூதுவருக்குப் பிரதமர் விளக்கினார்.

## மொஹமட் நஷீத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

இதையடுத்து தலைநகரில் உள்ள மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

நஷீத் தனது வீட்டுக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த தனது காரில் ஏறி அமர்ந்த போதே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த வெடிப்புச் சம்பவத்தின்போது அவரது இரு ஊழியர்கள் காயமடைந்துள்ளனர் எனவும், அதில் ஒருவர் வெளிநாட்டவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ள புகைப்படங்களில் சம்பவ இடத்தில் ஒரு மோட்டார் சைக்கிள் சேதமடைந்த நிலையில் இருப்பதை அவதானிக்க முடிந்துள்ளது.

குண்டு வெடிப்பு ஒரு கொலை முயற்சியா என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

53 வயதான நஷீத், 30 ஆண்டுகால சர்வாதிகார ஆட்சியின் பின்னர், மாலைதீவில் ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட முதலாவது ஜனாதிபதி ஆவார். அவர் 2008 முதல் 2012 வரை ஜனாதிபதியாகப் பணியாற்றினார்.

## கிளிநொச்சியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரிசோதனையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 07 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரும் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்காகச் சென்றவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் அடையாளம் காணப்பட்டவர்களில் மூவர் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்காக சென்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

## மாகாண மட்டத்திலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடுத்துள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டை முடக்குவது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மூன்று மாதங்களாகக் கதைத்து வருகின்றார். அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கொரோனா வைரஸ் தொற்று தற்போது வேகமாகப் பரவி வருகின்றது. முழு நாட்டையும் முடக்க முடியாவிட்டால், மாகாண மட்டத்திலாவது கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் அரசு தோல்வி கண்டுள்ளது. இதனை ஏற்க வேண்டும். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கூட கொரோனா விடயத்தில் தாம் தோல்வி என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்" – என்றார்.

## தாமதம் வேண்டாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரச மற்றும் தனியார் துறைகளில், மாநாடுகள், சேவையாளர்களின் சந்திப்பு என்பன இடம்பெறுவது தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்களின் பிரதானிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் மாநகர பகுதியைச் சேர்ந்த 77 வயதுடைய ஆண். மற்றையவர் இளவாலையைச் சேர்ந்த 75 வயதுடைய பெண்.

இதன்மூலம் கொரோனாத் தொற்றால் யாழ்ப்பாணத்தில் 21 பேரும், வடக்கு மாகாணத்தில் 27 பேரும் உயிரிழந்துள்ளனர் என்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் கூறினார்.

## அடங்க மறுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருகின்றனர்.

கொரோனாத் தொற்றால் இதுவரை 734 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியப் பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த உடனடிப் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுகாதாரத்துறையின் ஆலோசனைகளுக்கு அமைய இந்தப் பயணக் கட்டுப்பாடு மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் என்றும் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

# கொரோனாத் தொற்று நெருக்கடி நிலைக்கு அரசியல் காரணிகளால் தீர்வுகாண முடியாது

## நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவிப்பு



கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை வெற்றி கொள்ள ஆளும் தரப்பினரும், எதிர் தரப்பினரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும். அரசியல் காரணிகளை அடிப் படையாகக் கொண்டு தற்போதைய நெருக்கடியான நிலைக்குத் தீர்வு காண முடியாது என நாடாளு மன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரி வித்தார்.

ராஜகிரியவில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்திய நாட்டில் கொவிட் தாக்கத்தால் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை இலங்கைக்கும் ஏற்படும் வாய்ப்பு அதிகம் காணப்படுகின்றது என சுகாதாரத் தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை வெற்றிக் கொள்ள ஆளும் தரப்பினரும், எதிர்தரப்பினரும் ஒத்து ழைப்புடன் செயற்பட வேண்டும். ஆனால் இரு தரப்பினரும் பொறுப்புடன் செயற்படாமல் ஒரு தரப்பினர் பிறிதொரு தரப்பினரை தூற்றிக் கொள் கிறார்கள்.

அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு கொவிட் – 19 தாக்கத்தையும், அதனால் ஏற்பட்டுள்ள சவால்களையும் வெற்றிகொள்ள முடியாது.

சுகாதார காரணிகளை முன்னிலைப்படுத்தி செயற்படுதல் அவசியமாகும். சுகாதாரத் தரப்பினரது செயற்பாடுகளுக்கு அரசியல்வாதிகள் இடையூறு விளைவிக்கின்றனர் என அறிய முடிகிறது. இவ் வாறானவர்கள் தொடர்பில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ் நிலை தொடர்பாக அவதானம் செலுத்தாது நாடா ளுமன்றில் தேவையற்ற வாத பிரதிவாதங்கள் இடம்பெறுவது கவலைக்குரியது. ஆளும் தரப்பி னரும், எதிர்த்தரப்பினரும் பொறுப்புடன் செயற்படு கின்றமை அவசியமாகும். – என்றார்.

# 63 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் கண்டியில் பறிமுதல்



வான் ஒன்றில் 400 கிராம் ஹெரோயினுடன் பயணித்த சந்தேகநபர் ஒருவரை கண்டி பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று வியாழக்கிழமை மாலை கண்டி, யட்டவீதிய பகுதி யில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் கடுவல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 203 கிராம் ஹெரோயினும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் பொரள்ள பகுதியில் வைத்தும் 15 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த புதன்கிழமை மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் 630 கிராம் ஹெரோயின் கைப்பற்றப் பட்டுள்ளது என பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஹெரோயின் தொகையின் சந்தை பெறுமதி 63 லட்சம் ரூபா எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் இறுதிப் பரீட்சை ஒத்திவைப்பு

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் நடைபெறவிருந்த இறுதிப் பரீட்சை மறுஅறிவிப்பு வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் அச்சநிலையை அடுத்து இவ்வாறு பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தமாதம் 10 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் இந்தப் பரீட்சையை நடத்துவதற்குத் திட்ட மிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த பரீட்சை நடத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என கல்வியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# வீதிக் கடைகளில் பணியாற்றுவோருக்கு அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுப்பு

மேல் மாகாணத்தில் வீதியோரங்களில் காணப் படும் சிறு கடைகளில் பணியாற்றி வருவோருக்கு எழுமாறான அடிப்படையில் அன்டிஜன் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக மேல் மாகாணத்தில் பஸ் நிலையங்கள் மற்றும் ரயில் நிலையங்களுக்கு அருகில் நடைபாதை வியாபாரம் மற்றும் சிறு கடைகளில் வியாபாரம் செய்வோருக்கு இவ்வாறு பரிசோதனை நடத்தப்பட் டுள்ளது.

கடந்த புதன்கிழமை இவ்வாறான 275 பேர் கண்காணிக்கப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதில் 72 பேருக்கு அன்டிஜன் சோதனை நடத்தப்பட்டது எனவும் அதில் கொவிட் தொற்றுக்கு இலக்கான எவரும் அடையாளம் காணப்பட வில்லை எனவும் குறிப்பிட் டுள்ளார்.

இந்த பரிசோதனை நட வடிக்கைகள் மாகாணம் முழுவதிலும் முன்னெடுக் கப்படும் என அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

# கேரளக் கஞ்சாவுடன் பெண் அதிரடிப்படையால் கைது

அம்பாறை – திருக்கோவில் பிரதேசத் தில் கேரளா கஞ்சாவுடன் பெண் ஒருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்து ஒப்படைத்துள்ளனர் எனத் திருக்கோவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து நேற்று (வியாழக்கிழமை) திருக்கோவில் குடிநிலப் பகுதியிலுள்ள வீட்டை விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைத்து சோதனை யிட்டுள்ளனர்.

இதன்போது, குறித்த பெண்ணின் கணவர் யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ்ஸில் நேற்று அதிகாலையில் இரண்டு பொதிகளுடன் வந்துள்ளார் எனவும், அதனை அவர் வீட்டில் ஒழித்து வைத் துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதனையடுத்து, கஞ்சாவை விற் பதற்கு முயற்சித்து வந்த நிலையில், விசேட அதிரடிப்படையினர் அதனை வாங்குவதாக நாடகமாடி கஞ்சா விற் பனையில் ஈடுபட்ட பெண் ஒருவரைக் கைது செய்ததுடன், 2 கிலோ கஞ்சாவை யும் மீட்டுள்ளனர் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பெண் ணையும், மீட்கப்பட்ட கஞ்சாவையும் விசேட அதிரடிப்படையினர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன், நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

# ரஞ்சன் ராமநாயக்க கையொப்பமிட்ட பொதுமன்னிப்பு ஆவணம் சஜித்திடம்

ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் ரஞ்சன் ராமநாயக்க கையெழுத் திட்டுள்ள பொதுமன்னிப்புக் கோரும் கடிதம் அவரின் சட்டத்தரணி ஊடாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாஸ ஆவணங்களைப் பெற்றுள்ளார் என்று எதிர்க்கட்சித் தலை வரின் செய்தித் தொடர்பாளர் உறுதிப் படுத்தியுள்ளார்.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் குறித்த ஆவணங்களை ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகளிடம் ஒப்படைத் துள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த ஆவணங்கள் விரைவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவுக்கு அனுப்பப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவிலிருந்து தப்ப 3 வழிகள் அறிவிக்கப்பட்டன

இலங்கையில் கொவிட் வைரஸின் புதிய திரிபு வேகமாகப் பரவி வருவதால், பொது மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொவிட் வைரஸ் தொற்றாமல் தப்பித்துக் கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய 3 வழிமுறைகளை இலங்கை சுகாதார மேம்பாட்டு பணி யகம் வெளியிட்டுள்ளது.

அதற்கமைய அதிக மக்கள் கூடும் இடங்களில் நிற்பதை முடிந்தளவு தவிர்க்க வேண்டும்.

ஒருவருக்கு ஒருவர் அருகில் இருந்து கதைத்தல், உணவு உட்கொள்ளுதல் போன்றவற்றை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

நன்கு காற்றோட்டம் கிடைக்காத இடங்களில் நிற்பதைத் தவிர்ப்பதன் ஊடாக கொவிட் பரவுவதை நிறுத்த முடியும் என சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவித்துள்ளது.

# இராமநாதன் மகளிர் கல்லூரியின் உயர்தர பரீட்சை சிறந்த பெறுபேறு

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி நடந்துமுடிந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள் விவரம் –

வர்த்தகம் – A. அமுதினி 3A, T. வைஷ்ணவி 3A, G. யதுர்னா 3B, கலைப்பிரிவு – J. வினுசியா 3A, V. தேசாயினி 3A, J. லோகேஸ்வரி 2A B, S. பவித்திரா 2A B, V. தனலக்ஷி 2A B, R. டிஷானி 2A B, A. அபிநயா. 2A B, G.யனோசிகா 2A B, R. பகீர்தா. 2A B, S. சாளினி 2A B, L. கஜானி 2A C, N.றஞ்சித மலர். 2A C, S.துஷ்யந்தி A 2C, R.தனோஜிகா. A 2B, P.டிலக்சனா A 2B, C.துஷானி A 2B, K. தயாளினி A 2B, Y. றொபின்சிகா A 2C, T. வைஷ்ணவி ABC, N. துளசிகா ABC, K. தனுசிக ABC R. நீதீபா A 2S, M. தனுஷிகா 3B, S. சோபிகா 3 B, M. லதீக்கா 3B, L. பிரியங்கா 3B,

# கனடாவுக்கான உயர் ஸ்தானிகர் பதவியை நிராகரித்தார் லிவேரா

கனடாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பதவியை ஏற் றுக் கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை சட்ட மா அதிபர் தப்புலா லிவேரா நிராகரித்துள் ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவால் இந்த பதவிக்காக லிவேராவின் பெயர் முன்மொழி யப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

எனினும், தாம் அந்தப் பத வியை ஏற்றுக் கொள்ளப் போவ தில்லை எனவும் உள்நாட்டில் மக் களுக்கு சேவையாற்ற விரும் புகிறார் எனவும் லிவேரா தெரி வித்துள்ளார்.

சட்ட மா அதிபர் லிவேராவின் பதவிக் காலம் இந்த மாத இறுதி யில் பூர்த்தியாகின்றமை குறிப் பிடத்தக்கது.

லிவேரா தனது பதவிக் காலத் தில் 22 ஆயிரத்து 206 குற்ற வியல் வழக்கு விசாரணைகளை பூர்த்தி செய்துள்ளார் என சட்ட மா அதிபரின் இணைப்பு அதி காரி சட்டத்தரணி நிஷாரா ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி இவ்வாறான ஒரு பதவியை வழங்கியமைக்காக நன்றி பாராட்டுவதாகவும், எனினும் தாம் இலங்கையிலேயே இருந்து கொண்டு நாட்டு மக்களுக்கு சேவையாற்ற விரும்புகிறார் எனவும் லிவேரா கூறினார் என சட்டத்தரணி ஜயரட்ன தெரிவித் துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சட்டம் இல்லாத நாடு

**கொரோனாத் தொற்றுத் தடுப்பு நடவடிக்கை என்ற பெயரில் நேற்று முன்தினம் பிற்பகல் யாழ்.நகரில் நடைபெற்ற சம்பவம் பலரையும் முகம் சுழிக்க வைத்தது.**

**யாழ்.நகர மத்தியில் கொரோனாப் பரவல் தடுப்புக் கவச உடை அணிந்த பொலிஸார், வீடியோக் கமராக்கள் சகிதம் அதிரடியாகப் புகுந்து முறையாக முகக் கவசம் அணியாத எல்லோரையும் நாய் பிடிப்பது போல மடக்கிப் பிடித்து, கைகள், கால்களில் பற்றித் தூக்கிக் கொண்டு தரதரவென்று இழுத்துச் சென்று தயாராக இருந்த பஸ்களில் ஏற்றினர். பின்னர் அவர்களை ஒன்றாகச் சேர்த்து, பஸ் மூலம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று, பெயர் விவரங்களைப் பதிந்து, எச்சரித்து விடுவித்தனர் என்று கூறப்படுகின்றது.**

**எந்தச் சட்டத்தின் கீழ், என்ன விதமான நடவடிக்கை இது என்பது தெரியவில்லை. ஆனால், மனிதர்களை கட்டாக்காலி நாய்களை மடக்கிப் பிடிப்பது போல மடக்க வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது என்பது இன்னும் புரியவில்லை. இவ்வளவும் நடந்தேறும் வரையில் பார்த்திருந்த மக்களும், மக்களின் பிரதிநிதிகளும், தினசரி செய்தியாளர் கூட்டங்களைக் கூட்டி மக்களுக்கு அறிவுறுத்தல்களை நீட்டி முழக்கும் அதிகாரிகளும் இன்னும் இது குறித்து வாய் திறப்பவர்களாகத் தெரியவில்லை.**

**கொரோனா வைரஸ் தொற்று என்பது நமது வாழ்வில் அசாதாரண ஒன்று. முன்பின் சந்திக்காத சிக்கல். எப்படி அணுகுவது என்று தெரியாத நெருக்கடி. அதனால் அதனைக் கையாள்வதற்கு அசாதாரண நடைமுறைகளை – நடவடிக்கைகளை – பின்பற்றுவது கூட தவிர்க்க முடியாததுதான்.**

**ஆனால், அதற்காக எதையும், எப்படியும் செய்யலாம் என்று அரசோ, அதிகாரிகளோ, ஒழுங்கு – நீதியை நிலைநாட்ட வேண்டிய பொலிஸாரோ எண்ணிவிடக் கூடாது.**

**சரியான விடயத்தைக் கூட பிழையான முறையில் செய்தால் அது தவறுதான். குற்றம்தான்.**

**கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காக முகக் கவசம் அணிந்திருப்பது – அதுவும் பொது இடங்களில் பல பேர் கூடுகின்ற இடங்களில் முகக் கவசம் அணிந்திருப்பது – மிக மிகக் கட்டாயம் தான். அது விடயத்தில் தவறிழைப்பது சமூகக் குற்றம்தான்.**

**ஆனால், அது குற்றம் என்பதற்காக – தவறு என்பதற்காக – அது விடயத்தை தம்மிஷ்டப்படி – தமது விருப்பப்படி – அதிகாரிகளும், பொலிஸாரும் கையாளலாம் என்றால், இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கு, நீதி முறைமை எல்லாம் எதற்காக?**

**கொரோனா உலகில் கால் பதித்தது நேற்று அல்ல. அது புகுந்து ஒன்றரை வருடங்களாகி விட்டன. நமது நாட்டில் காலடி எடுத்து வைத்தும் ஓராண்டு கடந்து விட்டது.**

**இத்தகைய விடயங்கக் கையாள்வதற்காக எந்தச் சட்டமும் கடந்த நூறு ஆண்டுகளில் நிறைவேற்றப்படவில்லை.**

**சாதாரண தொற்றுப் பரவல் சட்டத்தின் கீழ், நினைத்த நினைத்த நேரத்தில், நினைத்த, நினைத்த இடங்களில், ஊரடங்குச் சட்டங்களைப் பிறப்பிக்க முடியாது. அத்தகைய சட்ட வலுவற்ற ஊரடங்கின் மூலம் வாகனங்களைத் தடுத்துப் பறிமுதல் செய்து வைப்பது, ஆள்களைக் கைது செய்து தண்டிப்பது எல்லாம் சட்ட முறையற்றவை. ஆனால் இலங்கையில் தாராளமாக அவை நடந்தன. பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் சட்ட வலுவானதா என்பதைக் கூடக் கவனிக்காமல், அந்த ஊரடங்கை மீறியோர் என நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டோருக்கு நீதிமன்றங்கள் அபராதத் தண்டனை விதிக்கும் நீதித் திருக்கூத்துக் கூடத் தாராளமாக அரங்கேறியது.**

**இவையெல்லாம் எதிர்பாராத சமயத்தில், எதிர்பாராத விதத்தில், எதிர்பாராமல் திடுதிப்பெனவந்த தேசியப் பேரிடர் ஒன்றைச் சமாளிப்பதற்கான தற்காலிக ஏற்பாடுகள், நடவடிக்கைகள் என்று நியாயப்படுத்தப்பட்டன. அன்றைய நிலையில் அது சரியாக இருந்திருக்கலாம்.**

**ஆனால் இன்றும் அதுதான் நிலைமை என்பது சட்டத்தின் ஆட்சிக்கு மாறான அடாவடித்தனமாகும்.**

**கொரோனாத் தொற்றுப் பரவ ஆரம்பித்து ஒன்றரை வருடங்கள் கடந்த பின்னரும் அத்தகைய நோய்த் தொற்றை – பேரிடரை – எதிர்கொள்வதற்கான முறையான சட்டங்களை இலங்கை தேசம் தயார்ப்படுத்தவேயில்லை என்பது நீதிமுறைமையில் பெரும் வரலாற்றுத் தவறாகும். ஆட்சி அதிகாரத் தரப்பின் மெத்தனப் போக்காக அல்லது சட்டத்தைக் கையிலெடுத்துத் தொடர்ந்து அராஜகம் செய்யும் பண்பாகவே இது கருதப்பட வேண்டும்.**

**அத்தகைய ஒழுங்கான சட்ட விதிமுறைகள் இல்லை என்ற சூழ்நிலையை வசமாகப் பயன்படுத்தித்தான் நேற்றுமுன்தினம் கட்டாக்காலி நாய்களை மாநகர சபையினர் மடக்கிப் பிடிப்பது போல, முகக் கவசம் முறையாக அணியாதோரை மடக்கிப் பிடித்து, கைகால்களில் பற்றித்தூக்கி, தரதரவென இழுத்துச் செல்லும் அராஜகத்தை பொலிஸார் யாழ்.நகரில் அரங்கேற்றினர்.**

**உரிய சட்டம் இல்லை என்ற இந்தத் தவறை நாடாளுமன்றத்தில் பல தடவைகள் சுட்டிக்காட்டிய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், கொரோனாத் தொற்றுத் தடுப்புக்கான தனிநபர் சட்டமூலம் ஒன்றைத் தனியான பிரேரணையாக நாடாளுமன்றில் சமர்ப்பித்திருப்பதும் கூட இதனால் தான்.**

**எத்தனை பேருக்கு இந்த விடயத்தின் ஆழம், அர்த்தம் புரியப் போகின்றதோ...?**

## கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகம் தரமுயர்த்தலில் கூட்டமைப்பு பாடுபடும்

### முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்



கல்முனைவடக்குதமிழ்ப்பிரதேசசெயலகம் தரம் உயர்த்தப்படவேண்டும் என்பதில் உறுதியாக நடவடிக்கைகளை முன்எடுத்து வருபவர்கள் தமிழ்தேசியக் கூட்டமைப்பு மட்டுமே. அந்த பணியில் இருந்து நாம் பின்வாங்கவில்லை. தொடர்ந்தும் அதற்கான பணி தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

– இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் ஊடக செயலாளரும், பட்டிருப்பு தொகுதி இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தரம் உயர்த்தப்படாமல் ஓர் உப செயலகமாக இயங்கிவருகிறது. கடந்த ஆறு தடவைகள் நாடாளுமன்ற பொதுத்தேர்தல்கள் இடம் பெற்று ஆட்சியமைத்த அனைத்து ஆட்சியாளர்களுக்கும் அப்போது இருந்த தமிழர் விடுதலை கூட்டணியாக இருக்கலாம் இப்போது உள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக இருக்கலாம் தொடர்ச்சியாக கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை தமிழ்த் தேசிய அரசியல் தலைவர்கள் வலியுறுத்தி வந்தமை எல்லோருக்கும் தெரிந்த விடயமே.

ஆனால் சில இஸ்லாமிய அரசியல் தலைவர்களின் எதிர்ப்புகளால் ஆட்சியாளர்களுக்கு அவர்களின் ஆதரவு நாடாளுமன்ற வாக்கெடுப்புகளில் தேவைப்பட்டதால் கல்முனை தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகளைத் தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகள் முயற்சி எடுத்த சந்தர்ப்பங்களில் எல்லாம் உதாசீனம் செய்து ஏமாற்றியதே வரலாறு.

கடந்த 2015 இல் ஆட்சியமைத்த நல்லாட்சி எனப்படும் பொல்லாட்சிக் காலத்திலும் கல்முனைவடக்குபிரதேசசெயலகத்தைதரம்உயர்துவது தொடர்பாக என்றும் இல்லாத வகையில் பல முன்னேற்றங்களைக் கண்டிருந்தது.

பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க வேண்டுமென்று இறுதிநேரத்தில் அதை செய்வதற்கான பூரண அதிகாரங்கள் இருந்த போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நம்பிக்கையை ஊட்டி இறுதியில் நம்பிக்கை துரோகம் இழைத்துவிட்டார். அதனால் அந்த அரிய வாய்ப்புகளும் இல்லாமல் போய்விட்டன.

இந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் உயர்தப்படவில்லை என்பதை கடந்த 2020 பொதுத்தேர்தலில் ஒரு பிரசாரமாக கையில் எடுத்த விநாயகமூர்த்தி முரளிதரன் என்பவர் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தரம் உயர்த்தக்கூடிய வாய்ப்புகள் இருந்தும் அதனை நல்லாட்சி அரசில் முட்டுக்கொடுத்தவர்கள் செய்நவில்லை என பிரசாரங்களை முன்னெடுத்து அம்பாறை மாவட்ட தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்தார்.

அம்பாறை மாவட்டத் தமிழ்மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தவில்லை என்பதற்காக எமக்கு எதிராக விநாயகமூர்த்தி முரளிதரனை ஆதரித்தார்கள்.

அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடித்து பழிதீர்த்தனர் இதுதான் உண்மை.

அப்படியானால் தற்போது ஆட்சி அமைத்த அரசுடன் பிரதமரின் இணைப்பாளர் என நாவிதன்வெளியில் காரியாலயத்தை திறந்த வினாயகமூர்த்தி முரளிதரன் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்தி விட்டாரா? அல்லது மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்தேசியக்கூட்டமைப்புக்குஎதிராககல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை காட்டி பிரசாரம் செய்தஅரசதரப்புநாடாளுமன்றஉறுப்பினர்கள் ஒன்பது மாதமாகியும் கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தி விட்டார்களா? இல்லை அவர்களாலும் அறிக்கை விடுவதை தவிரவும் அமைச்சர்களுடன் படம் காட்டுவதை தவிரவும் வேறு என்ன செய்ய முடிந்தது?

ஆனால் தற்போது தமிழ்தேசியகூட்டமைப்பு கல்முனை பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவதற்கான அரசியல் ரீதியாக சம்பந்தப்பட்டவர்களுடன் அணுகி அதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் எடுத்துக் கொண்டே இருக்கிறது என்பதை சகலரும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

கடந்த நல்லாட்சியில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் ஏமாற்றி உண்மை அதற்காக அவர் அந்த ஏமாற்றத்தை இப்போது அனுபவிக்கிறார். 1948 தொடக்கம் ஆட்சியாளராகவும் எதிர்க்கட்சியாகவும் 2015 வரை இலங்கை நாடாளுமன்றத்தில் கணிசமான உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கியதேசியக் கட்சி இம்முறை 2020தேர்தலில்ஓர்உறுப்பினர்கூடதெரிவுசெய்யப்படவில்லை என்றால் ஒரு வகையில் எம்மை ஏமாற்றியதற்கு கடவுள் கொடுத்த தண்டனையாகவே நான் இதை பார்க்கிறேன்.

எனவே கல்முனை வடக்கு பிரதேசசெயலகம் சம்பந்தமாக யார் எதை கதைத்தாலும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எப்படியும் எந்தவழியிலும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தும் பணியில் இருந்து ஓயாது எனவும் மேலும் கூறினார்.

## மன்னார் ஆலயத்தில் இடி மின்னல் தாக்கு





**ந.லோகதயாளன்.**

மன்னார் ஆட்காட்டி வெளி – குமணாயன் குளம் பகுதியில் உள்ள புனித தோமையார் ஆலயத்தின் மீது நேற்று மாலை இடி,மின்னல் தாக்கியுள்ளது.

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டி வெளி கிராம அலுவலகர் பிரிவில் உள்ள குமணாயன் குளம் புனித தோமையார் ஆலயத்தின் மீதே நேற்று வியாழக்கிழமை மாலை இடி,மின்னல் தாக்கம் ஏற்பட்டது.

இடி மின்னலுடன் கூடிய மழை பெய்த நிலையில் மதியம் 2.30 மணியளவில் குமணாயன் குளம் புனித தோமையார் ஆலயத்தின் மீது இடி வீழ்ந்துள்ளது.

இதன் போது ஆலயத்தினுள் கட்டட பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இருந்த மூவர் தெய்வாதீனமாக உயிர் தப்பி யுள்ளனர். ஆலயத்தில் மேற்கூரை பெருமளவு சேதமடைந்துள்ளது.

குறித்த சம்பவத்தைத் தொடர்ந்து ஆலய நிர்வாகத்தினர் , பொது மக்கள் இணைந்து ஆலயத்தை சீர் செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

# வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு அன்னமலர் பணிப்பாளராக நியமனம்

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராக திருமதி அன்னமலர் சுரேந்திரன் கடந்த புதன்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

இது வரை வவுனியா தெற்கு கல்வி வலயப்பணிப்பாளராக கடமை யாற்றிய முத்து இராதாகிருஷ்ணன் யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்று சென்றுள்ள நிலையில், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளராக செயற்பட்ட திருமதி அன்னமலர் சுரேந்திரன், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளராகநியமிக்கப்பட்டிருந்தார்.



இந்நிலையில்கடந்தபுதன்கிழமை உத்தியோகப் பூர்வமாக வவுனியா தெற்கு வலயத்தில் தனது கடமை களைபொறுப்பேற்றுக்கொண்டார்.

இதேவேளை, கடந்த நான்கு வருடங்களாக வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றிய இவர் வவுனியா சைவப்பிரகாச மக ளிர் கல்லூரி மற்றும் இறம்பைக் குளம் மகளிர் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவி என்பதும் குறிப் பிடத்தக்கது. (100)

# மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அரச அதிபர் தலைமையில் பிரிவுபசாரம்

மன்னார் மாவட்டத்தில் கடந்த மூன்று வருட கால மாக வலயக் கல்வி பணிப்பாளராக கடமையாற்றி பதவி உயர்வு பெற்று மாகாண மேலதிக கல்வி பணிப்பாளராக பதவியேற்கவுள்ள மன்னார் வலய கல்விப் பணிப்பாளர் ஜே.பிறட்லி மற்றும் மடு வலய கல்வி பணிப்பாளராக கடமையாற்றி யாழ்பாணம் வடமராட்சி வலய கல்வி பணிப்பாளராக இடம்மாற்றம் பெறவுள்ள க.சத்திய பாலன் ஆகியோரின் சேவை நலனை பாராட்டும் முக மாக பிரியாவிடை நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணியளாவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார்மாவட்டஅரசாங்கஅதிபர்திருமதிஏ.ஸ்ரான்லி டிமேல் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பதவி உயர்வு பெறவுள்ள ஜே.பிறட்லி மற்றும் இடமாற் றம் பெற்று செல்லவுள்ள க .சத்தியபாலன் ஆகிய இரு வருக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கான கௌரவிப்புக்களும் வழங்கப்பட்டன.

குறித்த பிரியாவிடை நிகழ்வில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.வசந்தகுமார், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், உதவி திட்ட மிடல் பணிப்பாளர் மாவட்ட செயலக உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த வலய கல்வி பணிப்பாளர்களின் சேவை காலத்தில் மன்னார் மாவட்ட ரீதியில் காணப்பட்ட பல்வேறு நிர்வாக சிக்கல்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதுடன் மாவட்ட ரீதியாக பின் தங்கிய கிராமங்களின் ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்திசெய்யப்பட்டது.

அத்துடன் வலய ரீதியில் பூர்த்தி செய்யப்படாத பாட விதான ஆசிரியர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு வேறு மாவட்ட ஆசிரியர்களின் இட மாற்றங்களில் திறம்பட்ட விதமாக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இரத்த வங்கிகளுக்கு குருதிகளுக்கு தட்டுப்பாடு

நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள இரத்தவங் கிகளில் குருதிக்கான பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதால், இரத்ததானம் வழங்குவதற்கு முன்வருமாறு பொதுமக் களிடம் தேசிய இரத்தவங்கி கோரிக்கை விடுத்துள்ளது.

இரத்ததானம் வழங்குமாறு கோரி தேசிய இரத்தவங்கி அதன் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் பதி வொன்றைச் செய்திருக்கிறது.

அப்பதிவில் மேலும் கூறப்பட்டிருப்பவை வரு மாறு –

நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவத்தொடங்கியிருக்கும் நிலையில், நடமாடும் இரத்ததான முகாம்களை அகற்றவேண்டிய நிலை யேற்பட்டுள்ளது. எனவே உரிய சுகாதாரப்பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றி, இரத்தவங்கிக்கு வருகைதந்து இரத்ததானம் வழங்குவதொன்றே தற் போதுள்ள மாற்றுவழியாகும்.

உங்களால் இயலுமானவரையில் நாடளாவிய ரீதி யிலுள்ள பிரதான வைத்தியசாலைகளுக்குச் சென்றோ அல்லது இரத்தவங்கியிலோ இரத்ததானம் வழங்குவதென்பது தற்போதைய சூழ்நிலையில் மிகப் பெரிய உதவியாக அமையும்.

குறிப்பாக ராகம, மஹரகம, குருணாகலை மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களிலுள்ள இரத்தவங்கிக்கு காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரைக்குள் ஏதேனுமொரு நேரத்தில் சென்று இரத்ததானம் வழங்க முடியும். அதேவேளை நாரஹென்பிட்டியிலுள்ள இரத்தவங்கி காலை 08.00 மணிமுதல் மாலை 06.00 மணிவரை திறக்கப்பட்டிருக்கும்.

சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர்கள் என அனைத்து வயதையும் சேர்ந்த பலர் தலசீமியா நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ராகம, குருணா கலை மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள இரத்தவங்கிகளில் குருதிபெறுவோர் அதிகளவில் இருக்கின்றமையால், அங்கு குருதிக்கான கேள்வி யும் உயர்வாகக் காணப்படுகின்றது.

அத்தோடு தலசீமியா நோயாளர்களுக்கு 10 – 14 நாள்களுக்கு ஒருமுறை குருதி உட்செலுத்த வேண்டிய தேவையுள்ளது. எனவே எதிர்வரும் வாரங்களில் இரத்தவங்கிக்கு அவசியமான குருதி கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்ப்பதாக அப்பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தனியார் வைத்தியசாலைகள் மீது சுகாதாரப் பரிசோதகர் சோதனை

## வவுனியாவில் அதிரடி

வவுனியாவில் தனியார் வைத்தியசாலைகள் மீது சுகாதாரப் பரிசோதகர்களால் விசேட சோதனை மேற்கொள்ளப்பட்டது.

கொவிட் 19 தாக்கம் வவுனியாவில் அதிகரித்து வரும் நிலையில், அதனைக் கட்டுப்படுத்தும் முக மாக சுகாதாரப் பிரிவினரால் பல்வேறு நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தனியார் வைத்தியசாலை ஒன்றில் கடமையாற்றும் மூன்று பேர் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப் பட்டிருந்தனர்.

இதனையடுத்து, வவுனியாவில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் சுகாதாரப் பிரிவினரால் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அங்கு உள்ள சுகாதார வசதிகள் தொடர்பில் கவனம் செலுத்தியதுடன், சுகாதார நடைமுறைகள் பின் பற்றப்படுகின்றனவா, அங்கு கடமையாற்றுவோர் மற்றும் வந்து செல்வோர் முகக்க வசங்களை அணிந்துள்ளார்களா, சமூக இடைவெளி பேணப்படு கின்றதா போன்ற விடயங்கள் தொடர்பாகப் பார்வையிட்டதுடன், கொவிட் தொடர்பான சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றாத தனியார் வைத்தி யசாலைகளுக்கு எதிராக முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டன.

# உணவக சமையலாளர் யாழில் திடீர் சாவடைவு

யாழ்ப்பாணத்தில் உணவகத்தில் சமையலில் ஈடுபட் டிருந்த நபர் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை மந்திகை பகுதி யில் உள்ள உணவகம் ஒன்றில் சமையலாளராகப் பணி புரியும் நபரே உயிரிழந்துள்ளார்.

மந்திகைப் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் சமையல் பணியில் ஈடுபட்டிருந்த போது வலிப்பு நோய் காரணமாக கறிச் சட்டிக்குள் தவறி விழுந்துள்ளார். உட னடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த இராசையா தீபனகுமார் வயது 41 என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை உணவகத்தில் சமையலில் ஈடுபட்டி ருந்த போது திடீரென வலிப்பு நோய் ஏற்பட்டு கறி சட்டிக் குள் தவறி விழுந்துள்ளார்.

அதனையடுத்து அங்கிருந்த ஏனைய பணியாளர்கள் அவரை மீட்டு மந்திகை வைத்திய சாலையில் சேர்த்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த புதன்கிழமை மாலை உயிரிழந்துள்ளார்.

# பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம் கொரோனாவால் தற்காலிகமாக மூடல்

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட் டவர்களை அடையாளம் கண்டமையைத் தொடர்ந்து திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தை தற்காலிக மாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அலுவலகத்தின் நிர்வாக அதிகாரி உட்பட ஐந்து உத்தியோகத்தர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

# சுகாதார விதிமுறைகளை மீறும் பஸ்களை கண்டறிய அதிகாரிகள்

கொழும்பு பெஸ்டியன் மாவத்தை, மாகும்புற, வவுனியா மற்றும் கடுவெல ஆகிய பிரதான பஸ் நிலையங்களில் சுகாதாரப் பரிந்துரைகளை மீறுகின்ற பஸ்களைக் கண்டறிய அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட் டிருக்கின்றனர் என தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் பணிப்பாளர் ஜெனரல் கொமாண்டர் நிலான் மிரெண்டா தெரிவித்தார்.

சுகாதாரப் பரிந்துரைகளை மீறி பயணிக்கின்ற பயணிகள் பஸ்களின் அனுமதிப்பத்திரத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு தினமும் பல பிரதேசங்களை உட்படுத்தி நடமாடும் பரிசோத கர்களை நிறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் சட்ட விதிமுறைகளை மீறுகின்ற பஸ் சாரதிகள் மற்றும் உதவியாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதாகவும் அவர் தெரிவித் தார். இதேவேளை இந்தக் குற்றங்களை தொடர்ச்சியாக செய்தால் பஸ் அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சுகாதாரவிதி மீறிய ஆலய நிர்வாகத்தினர் வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்டனர்

வவுனியாவில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாத ஆலயத்தினர் மூவர் சுகாதாரப் பரிசோதகர்களால் நேற்று (வியாழக்கிழமை) சுய தனிமைப்படுத்தப்பட்டனர்.

வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெரு, ஞானவைரவர் ஆலயத்தில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாது சுமார் 50 இற்கு மேற்பட்டவர்களுடன் கடந்த செவ்வாய் கிழமை மாலை அட்டமி பூஜை நடைபெற்றது. இதன் போது குறித்த ஆலயத்துக்கு விஜயம் செய்த சுகாதார பரிசோதகர்கள் ஆலயத்தை பார்வையிட்டதுடன், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாதமை தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் மூவருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைவாக ஆலய குரு, உபயகாரர், ஆலய நிர்வாகத்தைச் சேர்ந்த ஒருவர் என மூவர் சுகாதாரப் பரிசோதகர்களால் சுய தனிமைப்படுத் தப்பட்டுள்ளனர்.

# மாகாணசபைத் தேர்தலை காலங்கடத்த அரசு முடிவு



மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்தாதிருக்க அரசாங்கம் தீர்மானித் துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலை மையில் இடம்பெற்ற ஆளும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று பரவி வரும் தற்போதைய சூழ்நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது சிறந்த விடயமல்லவென இதன் போது ஆளுந் தரப்பின் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட் டியுள்ளனர்.

அத்துடன் நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் தேர்தலொன்றை நடத்து வதில் பல்வேறு சிக்கல் நிலைமைகள் காணப்படுகின்றன என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

# 20 ரயில் சேவைகள் நாட்டில் ரத்து

நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவல் அதி கரித்துள்ள காரணத்தி னால் இரவு அஞ்சல் ரயில் உட்பட 20 ரயில் சேவை கள் நேற்று (வியாழக்கி ழமை) முதல் ரத்து செய் யப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை ரயில் வேத் திணைக்களம் தெரி வித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# சிறிசபாரத்தினத்தின் 35 ஆவது நினைவு யாழில்

தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாப தலைவர் சிறி சபாரத்தினத்தின் 35 வது நினைவு தினம் நேற்று (வியாழக்கிழமை) யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - உரும்பிராய் பகுதியில் சிறி சபாரத்தினம் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட இடத்திலேயே இந்த நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் என சிலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## சிறிசபாரத்தினத்தின் நினைவு மன்னாரில்





தமிழீழ விடுதலை இயக்கத்தின் மறைந்த தலைவர் சிறி சபாரத்தினம் மற்றும் போராளிகள் பொது மக்களின் 35 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை மன்னாரில் இடம் பெற்றது.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் லூஸ்ரின் மோகன்ராஜ் தலைமையில் காலை 10 மணியளவில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது ரெலோ கட்சியின் மறைந்த தலைவர் சிறி சபாரத்தினம் அவர்களின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. குறித்த அஞ்சலி நிகழ்வில் கட்சியின் துனை அமைப்பாளர் பற்றிக் வினோ, கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் ஆகியோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## தெல்லிப்பழை பொலிஸாரால் கொரோனா விழிப்புணர்வு



யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை பகுதியில், காவல் துறையினரால் கொரோனா விழிப்புணர்வு செயற்பாடு நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தெல்லிப்பழை காவல்துறையினரால் ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டதோடு, வீதியால் செல்லும் வாகனங்கள் மறிக்கப்பட்டு முகக்கவசம் அணியாதவர்கள் எச்சரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாவிலிருந்து 810 பேர் குணமடைவு

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலும் 810 பேர் நேற்று (வியாழக்கிழமை) பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 885 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 529 பேருக்கு இதுவரை கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களில் 734 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறை நகரசபை பெறுகை அறிவித்தல்

1. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டிக் கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் **2016.09.30** ஆம் திகதிய 04/2016 (i) இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின்படி வடமாகாண எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட பெறுகைதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அட்டவணையில் காட்டியபடி கட்டட/ வீதிப்புனரமைப்புக்கு பொருத்தமான தரங்களில் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு செய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் (தொலைபேசி இலக்கம்: **– 021 - 226 - 3213)** மேலதிக தகவல்களையும், பெறுகை ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
6. பெறுகைப் பத்திரம் வழங்கப்படும் திகதி **07.05.2021** ஆம் திகதி தொடக்கம் **2021.05.24** ஆம் திகதி பி.ப.15.00 மணி வரை அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத பணமாக ரூபா **2000/=** இனை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
7. பெறுகை ஆவணங்களை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை எனும் முகவரிக்கு **2021.05.25** ஆந் திகதி **பி.ப 15.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ சேர்ப்பிக்க வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகை நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் பெறுகைதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பெறுகை திறக்கப்படும்.
8. பெறுகையானது சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து அறுபத்து மூன்று **(63)** நாட்கள் **(26.07.2021)** வரையும் செல்லுபடியாகும்.
9. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் 2021.05.20 ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.சொந்த செலவில் பங்குபற்றலாம்.
10. பெறுகை தொடர்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் அதிகாரம் பெறுகைக்குழுவின் தலைவருக்கே உண்டு.
11. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் ரூபாவில் (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் | நிதி மூலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு ரூபா | செல்லுபடியாகும் காலம் |
| 1 | கடற்கரை வீதியில் 4 ஆம் குறுக்குத்தெரு தொடக்கம் 3ஆம் குறுக்குத்தெரு வரையான நடைபாதை அமைத்தல் - Stage I | 2.65Mn | 90 நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2020 | C9/C8 (building) | **26500.00** | **24.08.2021** |
| 2 | நாச்சிமார் கோவில் வீதி மிகுதி வேலை (2 ஆம் குறுக்குத்தெரு 3ஆம் ஒழுங்கை), பருத்தித்துறை மீன்சந்தையில் மோட்டார் சைக்கிள், சைக்கிள் தரிப்பிடம் அமைத்தல். | 0.790Mn | 60 நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2020 | C9/C8 (building & Road) | **7900.00** | **24.08.2021** |
| 3 | மாம்பரம்பற்றை வீதி, வளலாய் ஒழுங்கை மிகுதி வேலை. | 1.631Mn | 60 நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2020 | C9/C8 | **16400.00** | **24.08.2021** |
| 4 | இலட்சுமணன் தோட்டம் வீதி 2 ஆம் ஒழுங்கை, ஒருதானை வீதி 2 ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி 14 ஆம் ஒழுங்கை (தாமர் வீதி) | 2.180Mn | 60 நாட்கள் | சபை நிதி 2021 | C9/C8 | **21900.00** | **24.08.2021** |
| 5 | பிராமண வீதி | 1.270Mn | 60 நாட்கள் | சபை நிதி 2021 | C9/C8 | **12700.00** | **24.08.2021** |
| 6 | சுப்பர்மடம் 6ஆம், 7ஆம் ஒழுங்கை | 0.535Mn | 60 நாட்கள் | சபை நிதி 2021 | C9/C8 | **5350.00** | **24.08.2021** |
| 7 | ஐயனார் கலட்டி வீதி 3ஆம் ஒழுங்கை | 0.510Mn | 60 நாட்கள் | சபை நிதி 2021 | C9/C8 | **5100.00** | **24.08.2021** |

**திரு.யோ.இருதயராஜா**
**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,**
**பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை.**
**2021.05.07**



- வே.வரதசுந்தரம் -

# கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்! 08

**ஈயறியாப் பூந்தேனே**
**எழுத்தறியா மறைபொருளே**
**என்றெல்லாம் ஏத்துவனே**
**ஆச்சிநீ காளி!**

**மாதோட்ட நன்னகரில்**
**கௌரியென்று பேர்பெற்றாய்**
**கோணமலைத் தாயே**
**ஆச்சிநீ காளி!**

**என்புருகி ஏத்திடுவார்**
**துன்பங்கள் போக்கிடுவாய்**
**அன்புமிகு தாயே**
**ஆச்சிநீ காளி!**

இவ்வாறு திருகோணமலைப் பதியின் காவல் தெய்வம் காளி ஆச்சியின் எழிலை, அன்பர்களுக்கு இரங்கும் ஈரநெஞ்சத்தைப் பாடிக்களித்த அடியார்கள் காளி ஆச்சி மீது அருளாளர் ஜெயச்சந்திரன் பாடியுள்ள பாதாதி கேசத் துதிப்பாடல்களில் லயித்துப் போகின்றனர்.

இவர் திருகோணமலையில் சமயப் பேச்சுக்கள், கதாப்பிரசங்கங்கள் ஆற்றி இளமைக் காலந்தொட்டு ஆன்மீக ஈடுபாட்டுடன் வாழ்ந்து இன்று கனடா நாட்டில் வாழ்ந்து வருபவர். திருகோணமலை இந்துக் கல்லூரி பழைய மாணவரான ஜெயச்சந்திரன் அவர்கள் கழகப் புலவர் சிவசேகரனாரின் வழிகாட்டலில் இலக்கியப் பணி ஆற்றிய திருவள்ளுவர் கழகத் தமிழ்ப்பண்ணையில் பூத்த நறுமலர். வில்லூன்றி கந்தசுவாமி கோயில் முன்னாள் ஆதீனகர்த்தா பூரணானேந்தேஸ்வரக் குருக்கள் அவர்களிடம் வடமொழி, வேதம் பயின்றவர். தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிவல்லுநர். ஆன்மீக எழுத்தாளர், கவிஞர், இன்னிசை கச்சேரி வல்லுநர், நடனம் ஆடவும் வல்லார் - என்று பல் துறைகளில் முத்திரை பதித்தவர்.

திருகோணமலை சிவானந்த தபோவன நிறுவுநர் சச்சிதானந்த மாதாஜி, நியூயோர்க் லோட்டஸ் டெம்பிள் ஸ்தாபகர் சச்சிதானந்த யோகியார் மற்றும் சிவயோக சமாஜ நிறுவுநர் சுவாமி கெங்காதரானந்தா ஆகியோரின் சீடர். இந்தப் பின்னணியில் அவர் காளி ஆச்சி மீது இயற்றியுள்ள பாதாதி கேசத் துதிப்பாடல்கள் கருத்தாழும், பக்திச்சுவை மிக்கவையாக உள்ளன.

நாம் நாடவேண்டியது திருவடிப்பேறு என்பது நமது சமய உண்மை. இறைவியின் திருவடிகளில் எமது தலையைச் சாத்தி நெஞ்சத்தை வீழ்த்தவேண்டும். இதுவே எமக்கு ஆத்ம ஈடேற்றம் நல்கும். இறைவியின் திருவடியின் எழிலையும், அருட் திறத்தையும் பலரும் பலவாறு பக்தியுடன் பாடியுள்ளனர்.

இறைவியினைப் பாதாதி கேசமாக வழிபடுவதும், பாடுவதும் நமது மரபு. அம்பாளின் பாதந்தொட்டு தலையதுவரை நமது உள்ளம் பதித்து வழிபடுவது அம்மரபு. அம்மரபினுக்கெனத் தனித்துவம் உண்டு. அது தாள்தலை - தாடலை என்பர். இதனாலே இறைவன் மீது பாதாதிகேசத் துதி பாடும் மரபுண்டு. கடவுளைத் துதி செய்கையில் திருவடி தொடங்கித் திருமுடி வரையில் வருணிப்பது மரபு. இதைப் பாதாதி கேசம் என்று சொல்லுவார்கள்.

இம்மரபில் ஆன்மீகப் பெரியார் ஜெயச்சந்திரன் காளி ஆச்சிமீது பாதாதிகேசத்துதி பாடி எங்கள் திருகோணமலைப் பத்திரகாளிக்குப் பெருமை சேர்த்துள்ளார். அருளாளர் ஜெயச்சந்திரன் பாடிய பாதாதிகேச மரபினை சைவத்தமிழ் அறிஞர் கி.வா.ஜகந்நாதன் பின்வருமாறு விளக்குவார்:-

'இறைவனுடைய சந்நிதானத்தில் முதலில் திருவடியைக் காண்பதுதான் முறை. நம் தலை அப்போதுதான் வணங்கும். அகங்கார முடையவன் அடியைக் காணமாட்டான். இறைவன் திருமுன் ஆணவம் அடங்கி நிற்க, அவனை வணங்கிப் பணிய வேண்டும். பணியுங்கால் அவன் திருவடி ஒன்றுதானே தெரியும்? அதைக் கண்டால், அன்புடன் கண்டால், பிறகு மற்ற அங்கங்களைப் பார்க்க இயலும், கடவுளைத் துதி செய்கையில் திருவடி தொடங்கித் திருமுடி வரையில் வருணிப்பது மரபு. இதைப் பாதாதி கேசம் என்று சொல்லுவார்கள்.'

திருகோணமலை மாவட்டத்தில் வேறெந்த ஆலய மூர்த்திக்கும் இவ்வாறு பாதாதிகேசத் துதி பாடப்பெறவில்லை. இலங்கையில் வேறெந்த கோயில் மூர்த்திக்காயினும் இவ்வாறு பாதாதிகேசத் துதி பாடப்பெற்றிருப்பதாக அறிய முடியவில்லை. இருப்பினும் அது விரல்விட்டு எண்ணக்கூடியவாறு ஒன்றிரண்டே இருக்கலாம்.

அன்னை பத்திரகாளி அம்பாள் மீது இவர் பாடிய பாதாதிகேசத் துதி இருபது பாடல்களைக் கொண்டது. இக் கோயிலின் கொடியேற்ற நன்னாள் ஒன்றில் அந்நாள் ஆதீனகர்த்தா பிரம்ம ஸ்ரீ சோமஸ்கந்த குருக்கள் ஐயா அவர்களின் அருளாசியுடன் காளி ஆச்சி சந்நிதியில் கவிஞரே, பாடி அரங்கேற்றினார்.

இப்பாடல்கள் பற்றிக் கழகப் புலவர் பெ.பொ. சிவசேகரம் அவர்கள் கூறிய கருத்துக்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இதோ அவை:-

'ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்மீது கொண்ட ஆராத அன்பில் எழுந்த தோத்திரங்களாக இவை விளங்குகின்றன. அம்பாளின் அருளைப் பெறுவதற்கு உள்ளம் பக்தி நிறைந்ததாய் இருத்தல் வேண்டும். பக்தியின்றி பத்திரகாளியின் அருளுக்கு நாம் பாத்திரர் ஆவது அரிதாகும். திரு. ச.ஜெயச்சந்திரன் அவர்களின் பாடல்கள் படிப்போர் உள்ளத்தில் பக்தி உணர்ச்சியை ஏற்படுத்தும் சொல் நயமும் பொருள் நயமும் உடையன. திருகோணமலையில் பிறந்த இளம் கவிஞராகிய ஜெயச்சந்திரன் அவர்களின் முயற்சியைப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் கடாட்சம் அவருக்கு வேண்டிய சகல சம்பத்துக்களையும் நல்கும் என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.'

இத்துதிப் பாடல்களை இருபத்திரண்டு ஆண்டுகளின் பின்னர் ஆசிரியர் தனது அறுபதாவது வயதில் இந்நாள் ஆதீனகர்த்தா பிரம்ம ஸ்ரீ ரவிச்சந்திரக் குருக்களின் அருளாசியுடன் கொடியற்ற நன்னாளில் பக்திச்சுவை ததும்ப அடியார்கள் உள்ளம் ஈர்க்குமாறு மீண்டும் பாடினார்.

திருகோணமலை பத்திரகாளி அம்பாள் மீது தான் பாடிய பாதாதிகேசத் துதி பிறந்த கதையை ச.ஜெயச்சந்திரன் அவர்களே கூறக் கேட்போம்:-

'1971 ஆம் வருடம், கல்முனையில் நாம் வாழ்ந்த காலமது. கல்முனை கிராம நீதிமன்றத்தில் பிரதம லிகிதராய் இருந்து, நிந்தாவூர், சம்மாந்துறை, அம்பாறை, இறக்காமம் நீதிமன்றங்கள் அனைத்திற்கும் பொறுப்பாய் இருந்து நீதிபதியுடன் ஒவ்வொரு நாளும் ஆங்காங்கு சென்றுவந்த காலமது.

ஒருநாள் காலைநேரம் திருகோணமலையிலிருக்கும் ஆலயங்களுக்கு பதிகம் வேண்டும் என்றோர் ஆசை என் மனதில் தோன்றியது. வில்லூன்றிக் கந்தனுக்கு முதல் பதிகம் என்ற எண்ணம் என்மனதில் தோன்றியது. எனது மனைவி லோஜியிடம் என்கருத்தைச் சொன்னேன். முதல் பதிகத்தை பத்திரகாளிக்குப் பாடுங்கள் என்று கூறினார். பதிகம் பிறந்தது. காலை உணவு இல்லை. பகற் பொழுதுமட்டும் ஒருவேளை உண்பேன் கவிதைகள் வளர்ந்தன.'

அந்த நாள்களில் திருகோணமலையில், எனது மனைவியின் பெரியதாயார் சிவகாமி அம்மா வாழ்ந்து வந்தார். அவரை நானும் பெரியம்மா என்றே அழைப்பேன். நான் மட்டுமல்ல உற்றார், ஊரவர்கூட அவ்வாறே அழைப்பர். பத்திரகாளி அம்மனுடன் மிகவும் நெருக்கமான உறவு கொண்டவர்.

ஒருநாள் அவர் ஒரு கனவு கண்டார். அம்பாள் அவர் கனவில் தோன்றினார். 'உலகம் குளிர, ஊர் குளிர, மண்குளிர, மனங் குளிர, குடும்பம் குளிர, இந்த ஐந்தும் குளிரப் பாடு!'என்று கூறினாராம். விடிந்ததும் பெரியமாமாவிடம்(இவர் பெரியம்மாவின் தம்பி சிவசுப்பிரமணியம்) தாம் கண்ட கனவினைக் கூறி, அம்பாள் இப்படிப் பாடும்படி பணித்துள்ளார். யாரிடமாவது சொல்லிப் பாடுவிக்க வேண்டும் என்றாராம்.

எமது மூன்றாவது மகனின் மகப்பேறிற்காக நாம் திருகோணமலைக்கு அவர்கள் வீட்டிற்கு வந்திருந்தோம். அம்பாளுக்கு பாடிய பாடல்களையும் கொண்டு வந்து இருந்தேன். பெரியம்மா தான்கண்ட கனவினை என்னிடம் சொன்னார்.

இதைக் கேட்ட நான் சிரித்தபடியே அம்பாளுக்கு பாட்டு நான் பாடிக் கொண்டு இருக்கிறேன். நான் பாடிய முதலாவது பாடல் 'உலகம் குளிர' என்று தொடங்குகிறது என்று பாடிக்காட்டினேன். அவரும் சந்தோஷப்பட்டார். அந்தவருட கொடியேற்றத்தின்போது கொடியேற்ற தினத்தன்று கொடி ஏற்றி அம்பாள் வீதி வலம் வரும்முன் இப்பாடல்கள் ஆலய ஆதீனகர்த்தா பிரம்ம ஸ்ரீ சு.கு. சோமஸ்கந்த ஐயா அவர்களின் ஆசியுடன் என்னால் பாடப்பட்டன - இதுவே இப்பாதாத கேசத்துதி பிறந்தகதை.' - என்பார் அவர்.

காளி ஆச்சி அடியார் சிவகாமியம்மா கண்ட கனவு நனவான - பக்தி இலக்கிய மரபு தழுவி பாதாதிகேசத் துதிபிறந்த, திருவருட் சித்தத்தை எண்ணுங்கள் என்கண்கள் பனிக்கின்றன. எந்தன் மெய்சிலிர்க்கின்றது. உள்ளமோ உருகி நிற்கிறது!.

ஆன்மீகக் கவிஞர் ஜெயச்சந்திரன் காளி ஆச்சியைப் பாடும்பக்தித் திறம் காணீர்!

**அழகுடை அம்மையே அன்பரெல்லாம்**
**பணிந்து போற்றும் தையலே!**
**பழைய நற்பரையே பார்வதியே!**
**பக்தர்க் கிரங்கும் தாயே!**
**தொழுதெழும் உன்னவர்க்கு உற்றபெரும்**
**தொல்லை களைந்திடும் அன்னாய்!**
**பழுதிலாத் திருக்கோண மலைவாழ்**
**ஆதிபத்ர காளி அம்மையே!**

**சக்திவடி வேலனுக் கன்புசெய்து சூர்மாத்**
**தடியவோர் வேல்கொடுத்தாய்!**
**பக்தரவர் பவவினை களைந்தெறிய ஞானமாம்**
**நின்னருட் பால்கொடுத்தாய்!**
**மிக்கபுகழ் வித்தகி நீயென்று போற்றிய**
**பேர்க்கெல்லாம் நல்வாழ் வளித்தாய் !**
**பக்குவமாம் ஞானமெய்ச் சுடரே! போற்றினேன்**
**காத்தருளும் ஆதிபத்ர காளிகையே!**

(தொடரும்...)



அன்னை பத்திரகாளி மீது பாதாதிகேசத் துதி பாடிய அருளாளர் ஜெயச்சந்திரன் தம்பதியினருக்கு திருகோணமலை ஆதிபத்திர காளி கோவிலில் கௌரவம் வழங்குகிறார் ஆதினகர்த்தா சோ.இரவிச்சந்திரக்குருக்கள்.



காளி அருள் பெற்ற சிவகாமி அம்மா

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியாவை விட தொற்றாளர் விகிதம் இலங்கையில் அதிகம்

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் சுட்டிக்காட்டு



இந்தியாவை விட இலங்கையில் கொவிட் தொற்று உறுதியாகின்றவர்களின் விகிதம் அதிகம் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மஹிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

'இலங்கையில் தற்போது நாளாந்தம் 1,500 இற்கும் அதிகமான கொவிட் நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றார்கள்.

இந்தியாவில் நாளாந்தம் 3 லட்சம் அளவிலானோர் கொவிட் தொற்றுக்கு உள்ளாகின்ற போதும், இந்தியாவின் மக்கள் தொகை மற்றும் இலங்கையின் மக்கள் தொகை என்பவற்றை ஒப்பிடும்போது, இலங்கையில் கொவிட் தொற்றுக்கு ஆளாகுகின்றவர்களின் விகிதம் அதிகமாக இருக்கின்றது.

அதேநேரம், கொவிட் நோயாளர்களுக்கான சிகிச்சையளிப்பதற்கான கட்டில்களுக்கு எதிர்காலத்தில் பற்றாக்குறை ஏற்படக்கூடும்.

தற்போது வைத்தியசாலைகளின் கொள்ளளவைக் காட்டிலும், அதிகளவான எண்ணிக்கையில் கொவிட் நோயாளர்கள் இருக்கின்றனர். இது எதிர்காலத்தில் பெரும் நெருக்கடி நிலையை ஏற்படுத்தும். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

## அலரிமாளிகையில் இப்தார் நிகழ்வு



முஸ்லிம் மக்கள் சார்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் ஆண்டு தோறும் நடத்தப்படும் இப்தார் நிகழ்வு இம்முறை கொவிட் கட்டுப்பாட்டு விதிகளுக்கு அமைய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரது பங்கேற்புடன் கடந்த புதன்கிழமை பிற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்றது.

இஸ்லாமிய மதத் தலைவர்கள் மற்றும் மக்களின் பங்கேற்புடன் மிக பிரமாண்டமாக நடைபெறும் இப்தார் நிகழ்வு இம்முறை கொவிட் -19 தொற்று காரணமாக ஒரு சிலரது பங்கேற்புடன் இடம்பெற்றது.

முஸ்லிம் கட்சிகள் சிலவற்றைப் பிரதிநிதித்துவப் படுத்தி வருகை தந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதன்போது முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் பிரதமருக்குத் தெளிவுபடுத்தினர்.

முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம் தேசியக் கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரை சந்தித்து நட்பு ரீதியாகக் கலந்துரையாடியமையுடன், இப்தார் நிகழ்விலும் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் பிரதமர் விசேட கவனம் செலுத்தினார்.

அலரி மாளிகையில் இப்தார் நிகழ்வில் கலந்து கொள்ளக் கிடைத்தமை விசேட அம்சமாகும் என இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

குறித்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான நஸீர் அஹமட், எச்.எம்.எம்.ஹாரிஸ், எஸ்.எம்.எம்.முஷரஃப், அலிசப்ரிரஹீம், எம்.எஸ். நவ்ஃபீக், இஷான் ரஹமான், பைஸல் காசிம் மற்றும் பிரதமரின் இஸ்லாமிய விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு செயலாளர் பர்சான் மன்சூர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## 22 லிற்றர் கசிப்புடன் ஒருவர் கைதாகினார்

தருமபுரபொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம் பொக்கணைப் பகுதியில் 22 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த கசிப்பைப் பொலிஸார் கைப்பற்றினர். கைது செய்யப்பட்டவர் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## நவீன நகரங்களாக அபிவிருத்தி செய்வது குறித்து கலந்துரையாடல்



கொழும்பு, மே 07

குருநாகல், மத்தல, லுணுகம் வெஹெர மற்றும் பெலிஅத்த ஆகிய நகரங்களை முழுமையாக நவீன நகரங்களாக அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள பிரதமர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை முற்பகல் இடம்பெற்றது.

இந்நகரங்களை நவீன நகரங்களாக அபிவிருத்தி செய்யும் திட்டம் தொடர்பில் கவனம் செலுத்திய பிரதமர் மஹிந்த ராஜக்ஷ, விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் திட்டத்தை செயற்படுத்த வேண்டிய விதம் குறித்து அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

நவீன சந்தை கட்டடத்தொகுதி, அனைத்து வசதிகளையும் கொண்ட மொத்த விற்பனை நிலையம் மற்றும் வாராந்த சந்தை, வாகன நிறுத்துமிடம், நகர் பூங்கா, பஸ் நிறுத்தம், பல்நோக்கு கட்டடம் மற்றும் நடுத்தர வர்க்க வீடமைப்புத் தொகுதி உள்ளடங்களாக பெலி அத்த நகர் அபிவிருத்தி செய்யப்படும் விதம் தொடர்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் அதிகாரிகளால் இதன் போது தெளிவு படுத்தப்பட்டது.

இரட்டை வழிச் சாலை அமைப்பு, வெளியிலும் உள்ளேயும் சுற்றுவட்ட பாதை, நான்கு பாதைகள் கொண்ட சாலை அமைப்பு என்பவற்றை நிர்மாணிப்பது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மத்தல விமான நிலையத்தை மையமாகக் கொண்டு வர்த்தகம், தொழில், குடியிருப்பு வசதிகள், சுற்றுலா, சுகாதார வசதிகள் மற்றும் விவசாய மேம்பாட்டு வலயங்களை நிறுவுதல் மற்றும் மத்தல - லுணுகம்வெஹெர பகுதியில் செயற்படுத்தப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் பிரதமர் இதன் போது கவனம் செலுத்தினார்.

குருநாகல் நகரை நவீன நகரமாக்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது பிரதமர் கேட்டறிந்தார். அதற்கமைய குருநாகல் நகரை மையமாகக் கொண்டு எதிர்காலத்தில் பல அபிவிருத்தி திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

## நீதி அமைச்சினால் அறிக்கை வெளியீடு

கொவிட் 19 வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக நீதிமன்ற நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக எடுக்கப்படுகின்ற ஏதேனும் தீர்மானங்களை மக்களுக்கு அறிவிக்கும் செயற்பாடு, நீதிச்சேவை ஆணைக் குழுவின் மூலம் அல்லது இந்த ஆணைக் குழுவின் அனுமதியுடன் நீதி அமைச்சால் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதி அமைச்சால் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக கொவிட்-19 வைரஸ் பரவல் காரணமாக நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக அல்லது நீதி அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பாக வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்படுகின்ற அறிக்கைகள் அதிகார பூர்வமானவை அல்ல என்பதுடன், கொவிட்- 19 வைரஸ் பரவல் காரணமாக நீதிமன்ற நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் கீழே குறிப்பிட்டுள்ள நீதிச்சேவை ஆணைக்குழுவின் அல்லது உயர் நீதிமன்றத்தின் இணையத் தளத்தினூடாக அறிவிக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 3 வாகனங்கள் மோதி விபத்து! ஒருவர் சாவு

மோட்டார் சைக்கிள்கள் இரண்டும் மற்றும் ஓட்டோ ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதி நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்த நிலையில் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

சிலாபம் - கொழும்பு பிரதான வீதியின் மாரவில, தல்வில பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்து அருகில் பொருத்தப் பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில் இவ்வாறு பதிவாகியிருந்தது.

# கொவிட் தொற்றுக்கான அதிதீவிர சிகிச்சை பிரிவை யாழில் விஸ்தரிக்குமாறு வலியுறுத்துகின்றார் டக்ளஸ்

கொவிட் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்கத் தேவையான அதிதீவிர சிகிச்சைப் பிரிவை யாழில் விஸ்தரிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் கொவிட் அச்சுறுத்தல் அதிகரித்துள்ள நிலையில், வடக்கு மாகாணத்தின் பிரதான வைத்தியசாலையாக இருக்கும் யாழ். போதனா வைத்தியசாலையில், கொவிட் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு அதிதீவிர சிகிச்சை கட்டில்கள் நான்கு மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளன.

கொவிட் தாக்கம் அதிகரிக்குமாயின், அதனை எதிர்கொள்வதற்கு குறைந்தபட்சம் 20 அதிதீவிர சிகிச்சை கட்டில்களும், அவற்றுக்கான உபகரணங்களும் உடனடியாகத் தேவைப்படுவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீபவானந்தராஜாவால் கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

அதேபோன்று, யாழ். போதனா வைத்தியசாலையின் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான உற்பத்தித் திறனுடைய ஒட்சிசன் பிறப்பாக்கி ஒன்றையும் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைத்துள்ள வைத்தியசாலைப் பணிப்பாளர், தற்போது காணப்படுகின்ற ஒட்சிசன் பிறப்பாக்கி, வைத்தியசாலைக்குத் தேவையான ஒட்சிசனை உற்பத்தி செய்வதற்குப் போதுமானதல்ல என்பதுடன், கடந்த ஐந்து வருடங்களாக தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றமையினால் உற்பத்தித் திறனும் குறைவடைந்துள்ளது.

இதன் காரணமாக வைத்தியசாலைக்குத் தேவையான மேலதிக ஒட்சிசன்கள் தற்போது தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைகளில் இருந்தே பெற்றுக் கொள்ளப்படுகின்றன என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார்.



குறித்த விடயங்கள் தொடர்பாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியுடன் கலந்துரையாடியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

கடற்றொழில் அமைச்சரின் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட சுகாதார அமைச்சர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளுக்கு அறிவுறுத்துவதாக தெரிவித்துள்ளார்.

# யாழ். கோப்பாய் பிரதேச செயலகத்தில் 32 வருடங்களாக இடமாற்றம் இல்லை

யாழ்ப்பாணம், மே 07

யாழ். கோப்பாய் பிரதேச செயலகத்தில் எந்த இடமாற்றமும் இல்லாமல் 32 வருடங்களாக உத்தியோகஸ்தர் ஒருவர் பணியாற்றுகின்றமை தகவலறியும் உரிமைச் சட்டம் ஊடாகக் கண்டறியப்பட்டிருக்கின்றது.

மேலும் இதே பிரதேச செயலர் பிரிவில் பல உத்தியோகஸ்தர்கள் 10 வருடங்களைக் கடந்தும் இடமாற்றம் எதுவுமில்லாமல். இருக்கின்றமையும் தகவலறியும் உரிமைச்சட்டம் ஊடாக அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இடமாற்றுச்சுற்று நிருபத்தின் பிரகாரம் 6 வருடங்களைப் பூர்த்தி செய்தவர்கள் தமது இடமாற்றத்துக்காக விண்ணப்பிக்க முடியும் என அறியக் கிடைத்தது.

இவ்வாறான நிலையில் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு அனுப்பப்பட்ட தகவல் அறியும் சட்ட மூலத்தில் அப் பிரதேச செயலகத்தில் இட மாற்றம் செய்யப்படாமல் 10 வருடங்களைத் தாண்டி பலர் இருக்கின்றமை அம்பலமாகியுள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பணியிட மாற்றத்துக்கு குறித்த பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்காமல் இருப்பினும் மாவட்ட செயலகத்தால் வழங்கப்படும் உள்ளக இடமாற்றம் ஏன் இவர்களுக்கு வழங்கப்படவில்லை என்ற கேள்வி எழுகின்றது.

அரச சேவையில் பலர் தமது சொந்த மாவட்டங்களை விட்டு வெளியில் கடமையாற்றுகின்ற நிலையில் அதே மாவட்டத்தில் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அவர்களும் தாம் தமது சொந்த பிரதேசத்திற்கு திரும்ப வேண்டும் என்றால் அங்கு உள்ளவர்கள் பணி இடமாற்றம் செய்யப்படவேண்டும்.

இவ்வாறான நிலையில் குறித்த உத்தியோகத்தர்கள் பல வருடகலமாக பணியிட மாற்றம் செய்யப்படாமல் இருக்கின்றமை போன்று ஏனைய பிரதேச செயலகங்களிலும் இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளதா? என்ற கேள்வியும் எழுகின்றது.

ஆகவே பொறுப்புவாய்ந்த உயர் அதிகாரிகள் உரிய காலத்தில் அரச சேவையில் வழங்கப்படுகின்ற இடமாற்றங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்தும் போது ஏனைய உத்தியோகத்தர்களும் பாதிக்கப்படமாட்டார்கள்.

## ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் உயிரியல் தொழல்நுட்ப மாணவி சாதனை

### கிளிநொச்சி மாவட்டத்தில்



கிளிநொச்சி மாவட்டத்தில் உயிரியல் தொழிநுட்ப பிரிவில் முதல் நிலை பெற்று மாணவியொருவர் சாதனை படைத்துள்ளார்.

கிளிநொச்சி, பரந்தன் பகுதியைச் சேர்ந்த மகேஸ்வரன் கயலினி என்ற கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவியே இரண்டு ஏ, பி. பெறுபேறுகளைப் பெற்று உயிரியல் தொழிநுட்ப பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதல் நிலையைப் பெற்றுள்ளார்.

குறித்த மாணவி பரீட்சை எழுதிவிட்டு தனது குடும்பத்தின் பொருளாதார சுமையைக் குறைக்க கிளிநொச்சி, அறிவியல் நகரில் இயங்கி வருகின்ற ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றியுள்ளார்.

தந்தை கூலித் தொழில், தாய் வீட்டுப் பணி செய்பவர். எனவே தான் 2020 உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு குடும்ப பொருளாதாரத்தை தனியே சுமந்து நிற்கும் தந்தைக்கு தோள் கொடுக்க ஆடைத் தொழிற்சாலைக்கு பணிக்குச் சென்றுள்ளார் எனத் தனது அனுபவத்தைப் பகிர்ந்துக் கொண்டுள்ளார்.

## வவுனியாவில் கணிதப் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவன்

கற்றல் நேரத்தில் கல்வியை செவிமடுத்து கற்றால் சிறந்த பெறுபேற்றைப் பெறலாம் என வவுனியாவில் கணிதப் பிரிவில் முதலிடம் பெற்ற அசோக்குமார் அபிதன் என்ற மாணவன் தெரிவித்துள்ளார்.

வெளியான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் படி கணிதப் பிரிவில் வவுனியா தமிழ் மகா



வித்தியாலய மாணவன் அசோக்குமார் அபிதன் 3ஏ சித்திகளைப்பெற்றுமாவட்ட ரீதியில்முதலிடத்தையும், தேசிய ரீதியில் 326 ஆவது இடத்தையும் பெற்று வவுனியா மண்ணுக்கும், பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார். அவர் தனது வெற்றி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் –

எனது இலட்சியம் சிறுவயது தொடக்கம் மாறிக்கொண்டே சென்று கொண்டிருந்தது. கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரத்தின் போதே எனது இலட்சியம் ஓட்டோ மொபைல் துறையின் மீது மாற்றம் அடைந்தது. இலட்சியத்தை அடைய வேண்டுமென கற்றேன் தற்போது சாதனை படைத்துள்ளேன்.

கடந்த இரண்டு வருடங்களாக நான் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடவில்லை. அதன் பின் கொவிட் -19 தொற்று காரணமாக எனது தனியார் கல்வி நடவடிக்கைகளையும் தொடர முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது.

பொழுதுபோக்கில் எனக்கிருந்த நாட்டம் சலித்து போனதன் காரணமாக கல்வியில் சற்று ஆர்வம் காட்ட முயற்சித்தேன். உண்மையில் கல்வி எனக்கு உறுதுணையாக அமைந்தது. எனக்கு சந்தோசமான விடயம். அத்துடன் கற்றல் நேரத்தில் கல்வியை செவிமடுத்து கற்றால் சிறந்த பெறுபேற்றைப் பெறமுடியும். குறித்த திறமைச்சித்திகளைப் பெறுவதற்கு காரணமாகவிருந்த குடும்பத்தினர், அதிபர், ஆசிரியர்கள், உறவினர்கள், நண்பர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

## கடமையில் ஈடுபட்ட வவுனியா நகரசபை சுகாதாரப் பரிசோதகருக்கு கொரோனா

வவுனியா நகரசபை சுகாதாரப் பரிசோதகருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரப் பிரிவினரால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கொவிட் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த வவுனியா நகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு கொவிட் தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## அதிவேக நெடுஞ்சாலையில் அதிகரிக்கும் தொற்றாளர்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் மத்தள இடமாற்றத்தில் சேவையாற்றும் சிலர் கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்த காரணத்தால் குறித்த இடமாற்றம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஊடாக பயணிக்கும் அனைத்து வாகனங்களும் சூரியவெள வெளியேற்றத்தைப் பயன்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இமதுவ இடமாற்றத்தின் ஊழியர்கள் சிலர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உள்ள காரணத்தால் அப்பகுதியும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பொலிஸ் நிலையங்களுக்கு இரண்டு சுற்றறிக்கைகள்

இலங்கையில் கொவிட் தொற்றின் மூன்றாவது அனர்த்த நிலையைக் கவனத்திற்கொண்டு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் கடந்த முதலாம் திகதி வெளியிட்ட புதிய சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக பொலிஸ் தலைமையகம், நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்கள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் இரண்டு விசேட சுற்றறிக்கைளை கடந்த 04 ஆம் திகதி அனுப்பி வைத்துள்ளது.

இதன்படி, புதிய சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக, வைபவங்களை நடத்துவது தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளமையுடன், இந்த தடை உத்தரவை மீறுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸ் தலைமையகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஒரு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் புதிய சுகாதார வழிகாட்டல்களின் மூலம் பொதுப் போக்குவரத்து சேவைகள் மற்றும் வாடகை வாகனங்கள் தொடர்பாகவும் போக்குவரத்துக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மீறுகின்றவர்கள் தொடர்பாகவும் கடும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முகக்கவசம் அணியாதவர்கள் மற்றும் முகக் கவசங்களை முறையாக அணியாதவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

### அபார்ட்மெண்ட் பால்கனி தோட்டம்





நகரமயமாக்கம் , நவீன தொழில்நுட்ப வளர்ச்சி, மருத்துவ வளர்ச்சி என்பன ஒரு தொகுதி மக்களை பெரும் நகரத்திற்கும் ஒரு பகுதி மக்களை கிராமங்களிலும் வாழ வைத்துள்ளது என்ன தான் மனிதன் கணிணி, இணையம் என முன்னேறினாலும் அவசர அவசரமாக ஒடினாலும் மரங்களை மலர்களை பார்க்கும் போது மனதுக்குள் மகிழ்சியையும் உவகையும் கொள்கிறான்

அபார்ட்மெண்ட் பால்கனி தோட்டம் என்பது ஒரு பால்கனியில் ஏற்பாடு செய்யப்பட்ட சிறு தோட்டமாகும். அபார்ட்மென்ட் பால்கனி தோட்டம் உங்கள் நேரத்தை செலவிட மிக அழகான இடம். மட்டுப்படுத்தப்பட்ட இடத்தைப் பொறுத்தவரை இந்த வகை தோட்டமானது கொள்கலன்களையே நம்பியுள்ளது

பால்கனியின் அளவைப் பொறுத்து சில தாவரங்களை செங்குத்தாகவும் சில தாவரங்களை கிடையாகவும் வளர்க்க முடியும் இதற்கு ஏதுவாக பானைகளை அல்லது கொள்கலனை சிறிய குறுக்காகவும் நெடுக்காகவும் வைக்கலாம் இதற்கு அடிக்கப்பட்ட தட்டிகளை பயன்படுத்தலாம். ஒரு அபார்ட்மெண்ட் பால்கனி தோட்டத்தை உருவாக்குவது மிக எளிதானதுஇதற்கு சில உதவிக்குறிப்புகள் தேவை. அவ்வளவு தான்

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# ரஞ்சனுக்கு விரைவில் மன்னிப்பு?



நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கையெழுத்திட்டுள்ள பொதுமன்னிப்புக் கோரும் கடிதம் அவரின் சட்டத்தரணி ஊடாக எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாஸவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாஸ ஆவணங்களைப்பெற்றுள்ளார்என்றுஎதிர்க்கட்சித் தலை வரின் செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் குறித்த ஆவணங்களை ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகளிடம் ஒப்படைத்துள்ளார் எனவும், அந்த ஆவணங்கள் விரைவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சஜித்தை அவசரமாகச் சந்தித்த ஐ.நா. பிரதிநிதி

இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையில் விசேட சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இவர்கள் இருவருக்கும் இடையிலான சந்திப்பு எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் கொரோனா பரவல் தீவிரமடைந்து வருவதும் அதனூடாக நாடு எதிர்கொண்டுள்ள சவால்களும் இதன்போது கலந்துரையாடப்பட்டன என்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் இன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை எதிர்கொண்டுள்ள சவால்கள் தொடர்பில் ஐ.நா. ஒத்துழைக்க வேண்டும் என்றும் சந்திப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.



தாம் இலங்கைக்கு அனைத்து விதமான ஒத்துழைப்புகளையும் வழங்கத் தயாராக இருப்பதாக ஐ.நா. வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளில் கட்சிபேதம் இன்றி அரசுக்குத் தாம் ஒத்துழைப்பதாகவும், ஐக்கிய மக்கள் சக்தி கொரோனா விடயத்தில் அரசியல் செய்யாது என்றும் சஜித் பிரேமதாஸ இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கையின் மருத்துவமனைகளில் இடப்பற்றாக்குறை அபாய நிலைமை

## கொரோனாத் தடுப்பு இராஜாங்க அமைச்சர் முன்னெச்சரிக்கை



இலங்கையின் மருத்துவமனைகளில் இடப்பற்றாக் குறை ஏற்படும் அபாயம் நிலவுகின்றது என ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்று நோய்கள் மற்றும் கொவிட் தடுப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே எச்சரித்துள்ளார்.

நாட்டின் கொரோனா நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை வழங்க முடியுமான நோயாளர் தொகை உச்சத்தைஎட்டியுள்ளது எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒரே தடவையில் அதிகமான நோயாளர்களை மருத்துவமனைகளில் வைத்து, சிகிச்சையளிக்கும் வசதிகள் குறைந்து கொண்டுசெல்கின்றன எனவும், அவசர சிகிச்சைப் பிரிவுகள் குறைவாக இருக்கின் றன எனவும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் தேவையற்ற பயணங்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் தெரியவரும் வரை சுயதனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி கேட்டுக்கொண்டுள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளான 16 ஆயிரத்து 720 பேர் தற்போது மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்புத் துறைமுக நகர

# சட்டமூலத் தீர்ப்பை 18இல் அறிவிப்பார் சபாநாயகர்!

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.

நேற்று மாலை குறித்த தீர்ப்பு சபாநாயகருக்குக் கிடைத்துள்ளது என நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி குறித்த தீர்ப்பு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனக் குறித்த திணைக்களம் அறிவித்துள்ளது.

# ஒரே நாளில் 14 சாவுகள்!

## கொரோனா காவு 734

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 14 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்படி 14 மரணங்களும் கொரோனாச் சாவுப்பட்டியலில் நேற்று பதிவாகியுள்ளனர். அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 734 ஆக அதிகரித்துள்ளது.

ஹிங்குராகொட பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடைய பெண், பொலன் னறுவை அரலகங்வில பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண், கோன பல பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதுடைய பெண், புலத்கொஹுபிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 76 வயதுடைய ஆண், தெவனகல பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுடைய ஆண், கல்லால்ல பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுடைய பெண், திரப்பன பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய ஆண், வத்தளை பிரதேசத் தைச்சேர்ந்த 66 வயதுடைய ஆண், களுத் துறை தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண், பயாகல பிரதேசத்தைச் சேர்ந்த 82 வயதுடைய பெண், பேராதனை பிரதேசத்தைச் சேர்ந்த 87 வயதுடைய ஆண், குருன பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயதுடைய பெண், தும்மல சூரிய பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய பெண், கிரிபத்கும்புர பிரதேசத்தைச் சேர்ந்த 84 வயதுடைய பெண் ஆகியோரே கொரோனாச் சாவுப் பட்டியலில் நேற்று பதிவாகியுள்ளனர்.

## இறந்தவருக்குக் கொரோனா உறுதி

# யாழில் மரண வீட்டுக்குச் சென்ற 30 குடும்பங்கள் தனிமைப்படுத்தல்

## வைத்தியசாலை நிர்வாகம் மீது குற்றச்சாட்டு

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நிர்வாகத் தவறினால் யாழில் 30 குடும்பங்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படும் அவலம் ஏற்பட்டுள்ளது எனச் சிறாம்பியடி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.சிறாம்பியடியைச் சேர்ந்த ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வேளை நேற்று உயிரிழந்தார். இவ்வாறு உயிரிழந்தவரின் சடலம் வீட்டாரிடம் வழங்கப்பட்டது. யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து வழங்கப்பட்ட சடலம் என்பதால் நம்பிக்கையின் அடிப்படையில் மரண நிகழ்வுக்குச் சென்றோம்.

இந்தநிலையில் இறந்தவருக்குக் கொரோனா என்பதால் மரண வீட்டுக்குச் சென்ற அனைவரையும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு சுகாதாரப் பிரிவினர் தற்போது கட்டாயப்படுத்துகின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் தவறின் காரணமாக சடலத்தை ஏற்றி இறக்கியவர், கையாண்டவர்கள், மரண வீட்டுக்குப் போனவர்கள் என 30 குடும்பம் தனிமைப்படுத்தலுக்குச் செல்லும் அவலம் ஏற்பட்டுள்ளது. - என்றனர்.

இது தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் பவானந்தராஜாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

உயிரிழந்த நபர், கடந்த 4ஆம் திகதி காலை 8.45 மணிக்கு வைத்தியசாலையில் அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு சேர்க்கப்பட்டார். அந்தப் பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று இல்லை என எழுதப்பட்டுள்ளது. இந்த நிலையில் மறுநாள் 5ஆம் திகதி பகல் அவர் உயிரிழந்துவிட்டார்.

மரணத்தின் பின்பும் மாதிரி பெறப்பட்டபோதும் முதல் நாள் சோதனை செய்த அடிப்படையில் உடலம் வழங்கப்பட்டுள்ளது. - என்றார்.

இவ்வாறு சர்ச்சைக்குள்ளான சடலம் இன்று காலை மீண்டும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

# மரண அறிவித்தல்



## திருநாவுக்கரசு நாகம்மா

இருபாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு நாகம்மா 06.05.2021 வியாழக்கிழமை நேற்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை, நல்லம்மா ஆகியோரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்ற செல்லப்பா, ரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகளும், திருநாவுக்கரசின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற மகாலிங்கம், காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும், வவி, சிவபாலன், காலஞ்சென்ற சிவகுமார், சுமித்திரா, சிவநேசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், லோகராசா, ஜெயந்தினி, சசிக்குமார், சுமதி ஆகியோரின் மாமியாரும், அருண், அரவிந்தன், கோகுலராஜ், மிதுஷா, மதுஷா, கோபிஷாந், கிரிஷாந், நிலக்சனா, லக்சனா, துசானா, சோபிகன், கிருத்திகா, உஷாந்தன் ஆகியோரின் பேர்த்தியும் ஆருக்ஷனா, விசானா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07.05.2021 இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செக்கடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:-குடும்பத்தினர்.**

# தமிழ் மக்களின் நலனை கலையரசன் கருத்தில் கொண்டு பேசுவதில்லை

## பொதுஜனபெரமுன பிரமுகர் குற்றச்சாட்டு



தமிழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டு கலையரசன் எம்.பி. பேசுவதில்லை.வெறுமனே அரசாங்கத்தை மாத்திரம் விமர்ச்சித்து தனது பதவிக்காலத்தை வீணடித்து வருகின்றார்.கடந்த காலங்களில் இப்பகுதியில் பல தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் பலரும் இருந்துள்ளனர்.ஆனால் இவரை போன்ற சோம்பேறித்தனமான நபர்களை காண முடியவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கல்முனை பிராந்திய செயற்பாட்டாளர் அஹமட் புர்கான் தெரிவித்தார்.

அம்பாறை ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனின் அண்மைக்கால பேச்சுக்களில் சொல்லாடல்கள் குறித்து தெளிவில்லை.நாடாளுமன்றத்தில் அதிக நேரம் பேசியனார் எனவும் அறியவில்லை.அவரை தமிழ் தேசியகூட்டமைப்பு வேறுசில அரசியல்காரணங்களுக்காக தேசிய பட்டியல் பதவியை வழங்கி அம்பாறை மாவட்டத்தில் வைத்திருக்கலாம்.அதன் நன்றிக்கடனாக அரசாங்கத்தை விமர்சிக்கின்ற நிலைமை அவருக்கு இருக்கலாம் என நினைக்கின்றேன்.எமது அரசாங்கம் நேர்த்தியான பாதையில் பயணித்துக் கொண்டு இருக்கின்றது.நாட்டில் தற்போது ஒரு இக்கட்டான நிலைமையை சந்தித்துள்ளோம்.ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் பலபிளவுகள் உள்ளன என ஊடகங்கள் பல கூறுகின்றன. இவ்விடயம் தொடர்பில் நாம் நிராகரிக்கின்றோம்.எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது.நாங்கள் கட்டுக்கோப்பாக இருப்பதனால் எம்மை எவராலும் பிரிக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

## ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளும் மில்கா

2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டிக்கு இலங்கை சார்பில் மில்கா கெஹானி கலந்து கொள்ளவுள்ளார்.

இம்முறை ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட இரண்டாவது இலங்கை போட்டியாளர் இவர் ஆவர்.

இதற்கு முன்னர் குதிரை சவாரிப் போட்டியில் கலந்து கொள்வதற்காக இலங்கை சார்பில் மெட்டில்டா கார்ல்சன் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.ஒலிம்பிக் குதிரை சவாரி போட்டியில் கலந்துகொள்ளும் முதலாவது இலங்கையர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## திருமணத்துக்கு அனுமதி கோரி அலையும் மண வீட்டார்கள்

திருமணம் செய்ய அனுமதிக்குமாறு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு பலர் வருகை தருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் எதிர்வரும் 20 ஆம் திகதி வரையில் திருமணம் உள்ளிட்ட அனைத்து நிகழ்வுகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் திருமண நாள் நிச்சயிக்கப்பட்டு உள்ளதாகவும், இந்த நாள்கள் தவறினால், அடுத்த திருமண நாள்கள் மாதக் கணக்கில் தள்ளி போகும் நிலை உருவாகியுள்ளதாகவும் அதனால் மிக எளிமையாக இரு வீட்டாருடனாவது மண நிகழ்வுகளை நடத்த அனுமதிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை சிலர் நீண்ட நாள்களாக திருமண நாள்கள் கூடாமல், திருமணம் கை கூடாமல் தோஷங்களால் பாதிக்கப்பட்டு இருந்தவர்களுக்கு தற்போது நாள் குறித்துள்ள நிலையில் குறித்த நாளில் திருமணம் நடத்த முடியா விட்டால் பின்னர் வருடங்கள் கடந்தும் திருமணம் கைகூடாது என ஜோதிடர்கள் கூறியுள்ளனர் எனவும், அதனால் மிக எளிமையாக, கடுமையான சுகாதார கட்டுப்பாடுகளுடனாவது திருமணத்தை நடத்த அனுமதிக்குமாறு கோரி வருகின்றனர்.

ஆனால் நாடளாவிய ரீதியில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய திருமணம் உள்ளிட்ட எந்த நிகழ்வுக்கும் அனுமதி வழங்க முடியாது என சுகாதார வைத்திய அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

## மறு அறிவித்தல் வரை மூடப்பட்டது கொத்மலை

கொத்மலை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பனன்கம்மன கிராம அலுவலகர் (473) காரியாலயத்துக்கு உட்பட்ட பகுதிகள் நேற்று (வியாழக்கிழமை) காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என கொத்மலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

இந்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் போது தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி பனன்கம்மன கிராம பகுதியில் 13 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்த பகுதிக்குள் உட்பிரவேசிக்கவும் அங்கிருந்து வெளிச் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமுலாகியுள்ள பயணத்தடை மீள் அறிவிக்கும் வரை அமுலில் இருக்கும் என கொத்மலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை இப்பகுதியில் 100இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதோடு, இன்னும் சிலருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளவுள்ளதாகவும் கொத்மலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

## வழக்கு விசாரணைகளை ஒத்திவைத்தது உயர் நீதிமன்று

உயர் நீதிமன்ற வழக்கு விசாரணைகள் ஒத்தி வைக்கப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் பெருந்தொற்று பரவுகை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியனவற்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த அனைத்து வழக்குகளும் ஒத்தி வைக்கப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) முதல் எதிர்வரும் 14ஆம் திகதி வரையில் இந்த வழக்கு விசாரணைகள் ஒத்தி வைக்கப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக அனைத்து நீதிமன்றங்களினதும் செயற்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவிலிருந்து வரும் பயணிகளுக்குக் கதவடைப்பு

இந்தியாவில் அதிகரித்து வரும் கொவிட் வைரஸ் தொற்று காரணமாக அங்கிருந்து வரும் பயணிகளைக் கட்டுப்படுத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கொவிட் வைரஸின் புதிய மாறுபாட்டின் பரவலைத் தடுப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சுகாதார அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களின் படி, இந்தியாவில் இருந்து பயணிக்கும் பயணிகள் இலங்கையில் இறங்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடன் அமுலாகும் வகையில் இந்த தீர்மானம் நடைமுறைக்கு கொண்டுவரப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சாணக்கியன் பச்சை பொய் சொல்கிறார்

## உலமா கட்சி அறிக்கை வெளியீடு

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் குறைக்கப்பட்டதாக சாணக்கியன் எம்.பி. நாடாளுமன்றத்தில் பச்சை பொய்யை சொல்லியுள்ளார். கல்முனை செயலகத்தின் கீழ் உப செயலகம் ஒன்றே இன்று வரை இயங்குகிறது. இதனை எந்தவொரு வர்த்தமானி அறிவித்தலும் இன்றி தான்தோன்றித்தனமாக கல்முனை தமிழ் செயலகம் என்றும் கல்முனை வடக்கு செயலகம் என்றும் சிலர் அழைத்து வந்தனர். இதனைத் தான் அரசாங்கம் உலமா கட்சி மற்றும் கல்முனை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் ஆகியோரின் நியாயமான கருத்தை ஏற்று முன்பிருந்தது போல் உப செயலகம் வடக்கு என பாவிக்கும்படி அறிவித்துள்ளது என உலமா கட்சியின் தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் உலமா கட்சியின் கல்முனை காரியாலயத்தில் நேற்று இரவு நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்–

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் குறைக்கப்பட்டதாக சாணக்கியன் எம்.பி. நாடளுமன்றத்தில் பச்சை பொய்யை சொல்லியுள்ளார். கல்முனை செயலகத்தின் கீழ் உப செயலகம் ஒன்றே இன்று வரை இயங்குகிறது. இதனை எந்தவொரு




வர்த்தமானி அறிவித்தலும் இன்றி தான்தோன்றித்தனமாக கல்முனை தமிழ் செயலகம் என்றும் கல்முனை வடக்கு செயலகம் என்றும் சிலர் அழைத்து வந்தனர். இதனை தான் அரசாங்கம் உலமா கட்சி மற்றும் கல்முனை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் ஆகியோரின் நியாயமான கருத்தை ஏற்று முன்பிருந்தது போல் உப செயலகம் வடக்கு என பாவிக்கும்படி அறிவித்துள்ளது. ஆனால் இதையெல்லாம் மூடி மறைத்து கல்முனை வடக்கு செயலகம் என்ற ஒன்று இயங்கியதாக சாணக்கியன் எம்.பி. பொய் சொல்லியுள்ளார்.

இவரது இந்தப்பொய்க்கு கல்முனை முஸ்லிம்களில் 95 வீதம் வாக்களித்த முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் பதிலளிக்காமல் சம்பந்தனின் கூடாரத்தினுள் ஒழிந்திருக்கின்றார். ஆகவே முஸ்லிம் எம்.பிக்கள் ஒற்றுமைப்பட்டு கல்முனை செயகத்தை இரண்டாக உடைக்காமல் காப்பாற்ற நாடாளுமன்றில் ஒருமித்து பேச வேண்டும். அதே போல் வர்த்தமானி மூலம் ஒப்புதல் இல்லாத செயலகத்தை இருப்பதாக காட்டி கல்முனையில் தமிழ் முஸ்லிம்கள் மத்தியில் பகைமையை ஏற்படுத்த வேண்டாம் என சாணக்கியன் எம்.பி. போன்றோரை கேட்டுக்கொள்கிறோம் .

கல்முனையில் முஸ்லிம் சமூகம் விழித்திருக்க தூங்கியவன் கண்ணில் குத்திய கதையாக பல கதைகளைத் தமிழ் எம்.பிக்கள் கூறுகிறார்கள். அதிகாரத்தில் இருந்த முஸ்லிம் காங்கிரஸ் இவற்றெல்லாம் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறது. கிராம நிலைதாரிகள் பிரிவு உருவாக்கத்திலும் பெரிய சூழ்ச்சிகள் புதைந்துள்ளன.

பிரிந்து நின்று சண்டை பிடித்தாலும் கல்முனை விடயத்தில் தமிழ் நாடளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஒருமித்து குரல்கொடுக்கிறார்கள். ஆனால் முஸ்லிம் தரப்பில் அப்படி ஒன்றுபட்டு குரல்கொடுக்க யாரும் முன்வருகின்றார் என தெரியவில்லை. கல்முனை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் முயற்சித்து கொண்டிருக்கிறார் அவருக்கு இறைவன் கூலி கொடுப்பான். முஸ்லிம்களின் ஏகோபித்த ஆதரவை பெற்ற கட்சிகள் எதிரணியிலையே இருக்கின்றன.

அதிலிருந்து 20 இற்கு ஆதரவளித்த எம்.பிக்கள் அரசுக்கு ஓரளவு ஆதரவு எனும் நிலைப்பாட்டிலையே இருக்கிறார்கள். அவர்களின் தலைவர்கள் அரசை எதிர்ப்பவர்களாகவே இருக்கிறார்கள். ஆகவே முஸ்லிம் சமூகம் அரசின் எதிரியாகவே தான் காட்டப்பட்டு வருகிறது. தமிழர்களும் இந்த நிலைப்பாட்டில் இருந்தாலும் அவர்களின் பிரச்சினைகளைப் பேச அரச சார்பு தமிழ் எம்.பிக்களை அழைத்து சென்று அரசாங்கத்துடன் பேசுகிறார்கள். அவர்களுக்குள் சமூகம் சார் புரிந்துணர்வு இருக்கிறது.

அதே போன்று முஸ்லிம் தரப்பிலும் எமது பிரச்சினைகளைப் பேச 20 இற்கு ஆதரவளித்த எம்.பிக்கள் செல்லும் போது அரசின் பங்காளியாக இருக்கும் தேசிய காங்கிரஸ்,உலமா கட்சி போன்றவர்களை அழைத்து சென்றால் அது சாதகமாக அமையும். 20இற்கு ஆதரவளித்தவர்கள் அரசை எதிர்த்து நின்று பின்னர் அரசுக்கு ஆதரவளித்தவர்கள். அவர்களுக்கு மக்களிடமும், அரசிடமும் இருக்கும் மரியாதையை விட தொடர்ந்தும் மஹிந்த கூட்டுடன் பயணிக்கும் பங்காளிக் கட்சிகளுக்கு அரசிடம் மரியாதை அதிகமாக இருக்கும் என மேலும் தெரிவித்தார்.

# தொற்று நீக்கும் செயற்பாடு கொடிகாமத்தில் நடந்தது









யாழ்ப்பாணம் - கொடிகாமத்தில் கிருமித்தொற்று நீக்கும் செயற்பாடு நேற்று இராணுவத்தின ரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, கொடிகாமம் பகுதியில் கடந்த வாரத்தில் அதிகளவு கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டமையை அடுத்து கொடிகாமம் நகர்ப்பகுதி, சந்தை கடைத்தொகுதி மற்றும் இரண்டு கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நேற்று இராணுவத்தினரால் குறித்த பகுதிகள் நீர் ஊற்றி சுத்தம் செய்யப்பட்டு கிருமித் தொற்று நீக்கும் மருந்து விசிறும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின் வழிகாட்டுதலில் இராணுவத்தின் 52 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரியின் நெறிப்படுத்தலில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## கொரோனா ஆபத்தில் ரயில்வே ஊழியர்கள்

ரயில்வே ஊழியர்களிடையே கொவிட் - 19 தொற்றின் பரவல் அதிகரித்து வருகின்றது என தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் இலங்கை ரயில்வே கடுமையான ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ளதாக ரயில்வே தொழிற் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

சுகாதார வழிகாட்டுதல்கள், கொவிட் -19 பரவுவதைத் தணிக்கவும் தடுக்கவும் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட போதிலும், ரயில்வே அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமையால் வைரஸ் பரவுவது வேகமாக அதிகரித்துள்ளது.

எதிர்காலத்தில் ரயில்வே அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றால், ஏராளமான ஊழியர்கள் கொரோனா வைரஸால் பதிப்படையக் கூடும். மேலும் இது பயணிகளையும் அதிக ஆபத்தில் ஆழ்த்தக்கூடும் என்றும் இலங்கை ரயில்வே தொழிற் சங்கத்தினர் எச்சரித்துள்ளனர்.

## இலங்கைக்கு பயணத் தடை பிலிப்பைன்ஸும் விதித்தது

கொவிட் தொற்று மிக வேகமாக பரவி வரும் நிலையில், பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து வரும் பயணிகள் நுழைவதற்கு பிலிப்பைன்ஸ் தடை விதித்துள்ளது.

அந்நாட்டு ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மே 7 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை குறித்த நாடுகளில் இருந்து வரும் பயணிகள் நாட்டுக்குள் நுழைவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நாடுகளுக்கு சென்ற பயணிகள் 7 ஆம் திகதிக்கு முன்னர் நாடு திரும்பினால் நாட்டுக்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்படாது. எனினும், அவர்களை 14 நாள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த வேண்டியிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தற்போதைய தடைகள் மற்றும் நடைமுறைகள் பொதுவாக வரும் பயணிகளுக்கு பொருந்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன அ'புரத்தில் 100 தொற்றாளர்கள் வீடுகளில்!

அநுராதபுர மாவட்டத்தில் கொவிட் தொற்றுக்குள்ளான 100 பேர் வைத்தியசாலைகளில் இடமில்லாமையால் வீடுகளில் இருக்கின்றனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாங்கள் சுகாதார அமைச்சுக்கு அறிவித்துவிட்டு, முடிந்த அளவிலானோரை சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அநுராதபுரம் மாவட்ட இணைப்பாளரான வைத்தியர் அஜந்த ராஜகருணா தெரிவித்துள்ளார்.

இடவசதி இன்மை காரணமாகத் தற்போது 100 இற்கு அதிகமான மக்கள் கொவிட் தொற்றுக்குள்ளாகி வீடுகளில் உள்ளனர். நாங்கள் தொடர்ந்து அவர்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கின்றோம்.

இந்த நிலையில் அங்கு இரண்டு பகுதிகள் முடக்கப்பட்டு மக்களின் பயணங்கள் தடை செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கர்ப்பிணிப் பெண்களுக்கு கொரோனாவால் ஆபத்து

முதல் 28 வாரங்களுக்குப் பின்னர் கர்ப்பிணி பெண்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகின்றமை ஒரு தீவிரமான நிலை என காசல் வைத்திய சாலையின் சிரேஷ்ட விஷேட வைத்தியர் சனத் லெனரோல் தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணி பெண்கள் தொற்றுக்கு உள்ளாகின்றமை தொடர்பில் இன்று (வியாழக்கிழமை) கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முதல் 28 வாரத்தில் தொற்றுக்கு உள்ளானவர்களுள் 80 சதவீதமானவர்களுக்கு அறிகுறிகள் எதுவும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணி பெண்களுக்கு சந்தேகத்துக்கு இடமான நோய் அறிகுறிகள் இருப்பின் உடனடியாக வைத்திய ஆலோசனையை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.




## கோப்பாய் செயலக திட்டமிடல் பணிப்பாளரின் இடமாற்றத்தை இரத்துச் செய்யக் கோரிக்கை

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரால் பணி இடமாற்றம் வழங்கப்பட்ட கோப்பாய் பிரதேச செயலக உதவி திட்டமிடல் அதிகாரியான ராஜதுரை திலீபனின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு ஜனாதிபதிக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கையெழுத்திட்டு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

தற்காலிகமாக வலிகாமம் கிழக்கின் பிரதேச செயலகத்திற்கு உதவி திட்டமிடல் அதிகாரியாக இணைக்கப் பட்ட திலீபன் முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கைத் திட்டமிடல் சேவையில் ஏழரை ஆண்டு சேவையை நிறைவு செய்தவர்.

2020 ஆம் ஆண்டு வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலகத்தில் நிரந்தரமாக இணைக்கப்பட்டார். இந்நிலையில், வடக்கு மாகாணம் மற்றும் வருடாந்த இடமாற்றத்துக்கான அவரது வேண்டுகோளை யாழ்.மாவட்ட செயலகம் ஏற்கனவே நிராகரித்தது. நிராகரிப்புக்கான காரணமாக அவர் ஒரு குறிப்பிட்ட சேவை நிலையத்தில் 6 ஆண்டுகள் சேவையை முடிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் திகதி அவருக்கு ஒரு கடிதம் கிடைத்தது. காரைநகர் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றார் என நாங்கள் அறிந்தோம். ஆகவே அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உண்மையான கோரிக்கையைக் கருத்திற்கொண்டு அவரது இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு தயவு செய்து கேட்டுக்கொள்கிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.05.2021 இல் வெளியிடப்பெற்றது.

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
28.08.1954



இறப்பு
04.05.2021

அமரர்.
## திருமதி. மகாலக்சுமி மதியாபரணம்

(யாழ் பல்கலைக்கழக நிதிக்கிளையில் பணியாற்றும் திருமதி. துஷியா பத்மநாதன் அவர்களின் அன்புத்தாயார்)

காலனவன் தன் கணக்கை சாலவே செய்யவே
மண் விட்டு வானம் சென்றீரோ?
வானம் சென்ற உமை நினைத்து
கண்ணீர் விட்டு கரைகின்றோம் ஆற்றுவாரில்லை
ஆறுதல் சொல்ல சொற்கள் இல்லை.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிதிக்கிளை ஊழியர்கள்
யாழ் பல்கலைக்கழகம்